தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

10.10.2012 P.M

11.10.2012 P.M

## நெல்லையில் பரவலாக மழை; அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் புதன்கிழமை இடி மின்னலுடன் மழை பெய்தது. சங்கரன்கோவில் அருகே மின்னல் தாக்கி பசுமாடு இறந்தது.

திருநெல்வேலி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாகவே அக்னியை விஞ்சும் வகையில் வெயில் சுட்டெரிந்தது. கடந்த சில நாள்களாக பகல்நேர வெப்பநிலை 100 டிகிரியை தாண்டியிருந்தது. உச்சகட்டமாக 105 டிகிரி வரையில் வெயில் கொளுத்தியது.

திருநெல்வேலியில் மாலை 5 மணியளவில் இடி மின்னலுடன் மழை பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதற்கிடையே, கடந்த இரு தினங்களாக பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 570.16 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டமும் சற்று உயர்ந்து 40.35 அடியாக இருந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 1.58 அடி உயர்ந்து 54.56 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44.30 அடியாகவும் இருந்தது.

## ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால், ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காவிரி நதி நீர் ஆணைய உத்தரவை நிறைவேற்றும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, கர்நாடக அணைகளில் இருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடகத்தில் விவசாயிகள், கன்னட அணைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து காவிரியில் தண்ணீர்

திறப்பது திங்கள்கிழமை இரவு திடீரென நிறுத்தப்பட்டது. இதனால், காவிரியில் நீர்வரத்து குறைந்தது.

தற்போது காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தமிழக எல்லையான பிலிகுண்டுலு வரை செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால், ஒகேனக்கல்லில் புதன்கிழமை அதிகாலை முதல் நீர்வரத்து அதிகரித்தது. நாள் முழுவதும் நீர்வரத்து சீராக இருந்தது.

பிரதான அருவிக்குச் செல்லும் நடைபாதையை தொட்டபடி தண்ணீர் செல்கிறது. நீர்வரத்து அதிகமாக இருந்தபோதும், சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பிலிகுண்டலுவில் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி, வினாடிக்கு 20 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்ததாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சென்னையில் 11 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை: அமைச்சர்



சென்னை, அக். 10 : சென்னையில் ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 11 லட்சம் லிட்டரை எட்டியது என அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி கூறினார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பால்வளத் திட்டங்கள் குறித்த செயல்பாடுகளின் ஆய்வுக் கூட்டம் பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி தலைமையில் சென்னையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி பேசியது: தமிழக முதல்வர் அறிவித்துள்ள பால் வளத்திட்டங்களைச் சீராக செயல்படுத்தி வருவதன் மூலம் தற்போது தமிழகத்தில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 27 லட்சம் லிட்டர் என்ற இலக்கினை அடைந்துள்ளது.

இதன் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்களுக்கு உடனடியாக பணப் பட்டுவாடா செய்ய வேண்டும். அரசு செயல்படுத்தி வரும் பால்வளத் திட்டங்களை நகர, ஒன்றியங்களில் தெரியப்படுத்தி இன்னும் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

கடந்த 2011-ம் ஆண்டு வரை ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு சென்னையில் 10.20 லட்சம் லிட்டராக இருந்து வந்தது. தற்போது 11 லட்சம் லிட்டர் என்ற இலக்கை எட்டியுள்ளது. இதில் மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு 7 லட்சம் லிட்டரும், தானியங்கி பால் வழங்கும் இயந்திரம் மூலம் 50 ஆயிரம் லிட்டரும், முகவர்கள் மற்றும் சில்லறை விற்பனை மூலம் 3.50 லட்சம் லிட்டர் என விற்பனை உள்ளது. இதை இன்னும் கூடுதலாக்க அதிகாரிகள் பாடுபடவேண்டும். ஆவின் வட்டார அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு அக்டோபர் 13-ம் தேதி வரை மாதாந்திர பால் அட்டைகள் அந்தந்த வட்டார அலுவலகங்களில் வழங்கப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியின் போது ஆவின் நிர்வாக இயக்குநர் தா.கி.ராமச்சந்திரன், இணை நிர்வாக இயக்குநர் என்.சுப்பையன், பொது மேலாளர் பி.குமாரவேல் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தாட்கோ மூலம் மானியக் கடன்: விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

தாட்கோ மூலம் மானியத்துடன் கடன் உதவி பெற விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் அக். 21ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தாட்கோ மேலாண்மை இயக்குநர் ஆ.சுகந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தாட்கோ மேலாண்மை இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தாட்கோ மூலம் கடன் உதவி பெறுவதற்கு அக். 10-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது தற்போது, அக். 21-ம் தேதியாக மாற்றப்பட்டுள்ளது.

மானியத்துடன் கடன் உதவி பெற விண்ணப்பிப்பவர்கள் ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 1 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் www.applicationtahdoc.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிடச் சான்று, சாதிச்சான்று, வருமானச்சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதியையும் பதிவு செய்ய வேண்டும்.

திட்ட அறிக்கையை பெறப்பட்ட தேதியையும் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒரு குடும்ப அட்டையை வைத்து ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

மகளிர் சுய உதவிக்குழு சுழல்நிதித் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்பும் மகளிர் அனைவருமே 18 வயது நிரம்பியிருக்க வேண்டும்.

சில மாவட்டங்களில் சில திட்டங்களுக்கு போதிய அளவில் விண்ணப்பங்கள் வரவில்லை. மேலும், பொதுமக்களிடமிருந்து கால நீட்டிப்பு வேண்டும் என்று கோரிக்கையும் எழுந்தது. அதனால், அக். 21ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வடக்கு மாகாண நிலவரம்: பால் லிட்டர் ரூ.128; குடிநீர் பாட்டில் ரூ.60**



இந்த மாகாணத்துக்கு உள்பட்ட யாழ்ப்பாணத்தில் 1,000 வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்படி கடந்த ஜூலையில் பயனாளிகளுக்கு முதல் கட்டமாக இந்திய அரசு வீடுகளை வழங்கியது.

2-வது கட்டமாக, 43 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தை இந்திய அரசு கடந்த 2-ஆம் தேதி காந்தி ஜெயந்தியன்று தொடங்கியுள்ளது.

முதல் கட்டத் திட்டம், ஒப்பந்ததாரர்களால் கட்டப்பட்ட வீடுகளாகும். அதில் குறைபாடு இருப்பதாகவும் பயனாளியின் விருப்பத்துக்குத் தக்கவாறு இல்லை என்றும், அவை நிரந்தரமாகத் தங்கும் வீடுகள் இல்லை என்றும் புகார் எழுந்தது. இதனால், பயனாளிகளே அவர்கள் விருப்பத்துக்குத் தக்கவாறு வீடு கட்டிக் கொள்ளும் வகையில் இரண்டாவது திட்டம் உருவாக்கப்பட்டது.

இதற்காக இந்திய அரசு இலங்கை ரூபாய் மதிப்பில் 5.50 லட்சத்தைப் பயனாளியின் வங்கிக் கணக்குக்கு நான்கு கட்டங்களாக மாற்றும். அந்த நிதி மூலம் தமது விருப்பத்தின்படி அந்தப் பயனாளி, அரசு அங்கீகரித்த ஒப்பந்ததாரர் மூலம் வீடு கட்டிக் கொள்ளலாம். 800 சதுர அடி நிலத்தில் 550 சதுர அடிக்கு வீடும் மீதமுள்ள நிலத்தில் தோட்டம் வைக்க வசதிகளும் செய்து கொள்ள வேண்டும் என்பது திட்டத்தின் நிபந்தனையாகும்.

முதல் கட்டத் திட்டத்தில் வீடுகள் ஒதுக்கப் பெற்றவர்கள் ஆளும் அமைச்சர்களின் ஆதரவாளர்கள், அரசியல் பின்னணி கொண்டவர்கள் எனக் கூறப்பட்டது. அதனால், இப்போது பயனாளிகளைத் தேர்வு செய்யும் பணியில் ஐக்கிய நாடுகள் சபை ஹேபிடேட், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தேசிய வீட்டுவசதி வளர்ச்சி ஏஜென்சி, ஹேபிடேட் ஃபார் ஹியுமானிட்டி என்ற அரசுசாரா அமைப்பு ஆகியவை ஈடுபட்டுள்ளன.

பயனாளிகள் பலர் அருகில் உள்ள கிராமங்களில் தாற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கொட்டகைகளில் வசித்து வருகின்றனர். முள்வேலி முகாமில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட பலரும் இதில் உள்ளனர்.

முள்வேலி முகாமை மூட  வேண்டும் என்ற அவசரத்தில் அங்கிருந்தவர்கள் வெவ்வேறு பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை அனைத்து இடங்களிலும் பரவலாகப் பார்க்க முடிகிறது. அவர்களின் நடமாட்டம் உள்ளூர் போலீஸார் மூலம் கண்காணிப்பட்டு வருகிறது.

வீடு உண்டு, மின்சாரம், தண்ணீர் இல்லை: இந்திய அரசு வீடுகள் கட்டித் தந்தது பாராட்டுக்குரியது. ஆனால், அங்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. பொருளாதாரச் சிக்கலுக்கு இடையே புதிய இடத்தில் புதிய சூழ்நிலையில் வாழ்வது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சவால் நிறைந்ததாகவே உள்ளது. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் உள்நாட்டுப் போர் நடந்த 25 ஆண்டுகளாக மின்சார வசதியின்றி வாழ்கின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் மின்சாரம், குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் இப்போதுதான் தொடங்கியுள்ளன. கிளிநொச்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு மின் பாதை அமைக்கும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

பால் லிட்டர் ரூ.128: உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் முகாமில் இருந்து திரும்பிய பிறகும் வாழ்வாதாரத்துக்கு வழியின்றித் தவிப்பதைப் பார்க்க முடிந்தது. தோட்ட வேலைக்கு ரூ.500, தொழிற்சாலை பணிக்கு ரூ.400 தினக்கூலியாக வழங்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் விலைவாசி நிலவரம் அதிர்ச்சி அளிக்கிறது. இலங்கை ரூபாய் மதிப்பில் பால் விலை லிட்டருக்கு ரூ.128, தக்காளி கிலோ ரூ.70, உருளைக்கிழங்கு ரூ.60, வெங்காயம் ரூ.65, குடிநீர் பாட்டில் ரூ.60, ஒரு முட்டை விலை ரூ.18, அரிசி கிலோ ரூ.65, ஐநூறு கிராம் பிரெட் பாக்கெட் ரூ.85, ஒரு வழி போக்குவரத்துக்கு சராசரியாக ரூ.65, மாதாந்திர பேருந்து பயண அட்டை ரூ.1,250 என உள்ளது.

ராணுவ மயம் நீடிக்கிறது: வடக்கு மாகாணத்துக்கு உள்பட்ட ஐந்து மாவட்டங்களில் குறிப்பாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் குவிக்கப்பட்டிருந்த ராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு கூறுகிறது. ஆனால், 20 ஆயிரமாக இருந்த ராணுவத்தினரின் எண்ணிக்கை இப்போது ஐந்தாயிரமாகியுள்ளது. பல இடங்களில் தேநீரகங்களையும் உணவகங்களையும் ராணுவத்தினரே நடத்தி வருகின்றனர்.

ஓராண்டுக்கு முன்பு ஊர் முழுவதும் நிறுத்தப்பட்டிருந்த ராணுவத்தினர் இப்போது ஊருக்கு உள்ளே ஒதுக்குப்புற மண்டபங்கள், குடியிருப்புப் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

நகரின் அனைத்துச் சந்திப்புகளிலும் ராணுவச் சோதனைச் சாவடிகள் உள்ளன. அதில் 3 முதல் 5 ராணுவ வீரர்கள் உள்ளனர். ஆனால் முன்பிருந்ததைப் போல் இப்போது கடும் கெடுபிடி இல்லை என இங்கு வசிக்கும் மக்கள் கூறுவது ஆறுதலாக உள்ளது.

தீர்வுக்கு என்ன வழி?

புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையே 30 ஆண்டுகளாக நிலவிய போரால் பாதிக்கப்பட்டது என்னவோ வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வசித்த அப்பாவிப் பொது மக்கள்தான். அவர்கள் தொலைத்த 30 ஆண்டு வாழ்க்கையையும் உறவுகளையும் ஒருபொழுதில் திட்டமிடுவதால் மீட்டுக் கொடுத்துவிட முடியாது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் இலங்கையில் மேற்கொள்ளும் மறுவாழ்வுப் பணிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயத்துக்கு போடும் மருந்தாக அமையுமே தவிர, நிரந்தரத் தீர்வாக அமையாது. அந்தப் பணியைச் செய்ய வேண்டியது இலங்கை அரசின் தலையாய கடமையாகும். ஆனால், தமிழர்களுக்கு மறுவாழ்வையும் அரசியல் உரிமைகளை அளிப்பதிலும் அக்கறை காட்டுவதற்குப் பதில் விடுதலைப் புலிகள் என்ற இயக்கம் இலங்கையில் இருந்ததைச் சுவடு தெரியாமல் அழிக்கும் நடவடிக்கைதான் மேலோங்கிக் காணப்படுகிறது.

இதுபோன்ற செயல்பாடு, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் இலங்கை அரசுக்கு உளப்பூர்வ அக்கறை இல்லை என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

மறுவாழ்வுப் பணிகள் தொடர்பாக இலங்கைக்கு இந்தியா கோரிக்கை விடுக்கலாம். ஆனால், நெருக்கடி கொடுக்க முடியாது. அந்தப் பணியை இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் அமைப்புகள்தான் செய்ய வேண்டும். இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற தமிழ் அரசியல் கட்சிகள் அடங்கிய கூட்டணிக்கு 14 உறுப்பினர்கள் உள்ளனர். ஆளும் கூட்டணி அரசிலும் தமிழ் பேசும் அமைச்சர்கள் உள்ளனர். இவர்கள் ஒற்றுமையுடன் குரல் கொடுத்தால் சுமார் 30 ஆண்டுகளாகத் தங்கள் வாழ்க்கையை இருட்டில் தொலைத்த தமிழர்களுக்கு விடியலையும் அடிப்படை உரிமையையும் மீட்டுக் கொடுத்த பெருமையை வரலாறு அவர்களுக்கு கொடுக்கும்.

10th oct 2012 P.M

**மரவள்ளியை பூச்சிகளிடமிருந்து பாதுகாப்பது எப்படி?**



புதுச்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பயிரிடப்படும் மரவள்ளிகளை தற்போதைய சூழ்நிலைகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிகம் தாக்குகின்றன.

இவற்றை முறையான உயிர்ரக மருந்துகளை உபயோகித்து கட்டுப்படுத்தலாம். மரவள்ளியை பொறுத்தவரை, பொதுவாக விவசாயிகள் முள்ளுவாடி மற்றும் கேரளா ரோஸ் வகைகளையே பயிர் செய்கின்றனர். இந்த மரவள்ளி கிழங்கு வகைகள் சமைப்பதற்கு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் ஜவ்வரிசி மற்றும் சேமியா தயாரிக்கவும் பயன்படுகிறது.

மரவள்ளிப் பயிர்களில், தற்போது சாறு உறுஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ, மாவுப் பூச்சி மற்றும் செஞ்சிலந்திகளின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.

இந்தப் பூச்சிகள், இலை மற்றும் தண்டுப் பகுதிகளில் உள்ள சாற்றினை உறிஞ்சுவதால் இலையின் நிறம் மஞ்சள் நிறமாக மாறுவதோடு இலைகளில் நடைபெறும் ஒளிச்சேர்க்கையும் பாதிக்கப்படுகிறது. இதனால் மகசூல் குறையும் நிலை ஏற்படுகிறது.

இந்த சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் அறிவியல் வேளாண்மை நிலையத்தின் பூச்சியியல் துறை வல்லுநர் நி.விஜயகுமார் கூறியது:

வெள்ளை ஈ: மரவள்ளி செடிகளில் பொதுவாக முதல் நான்கு இலைகளில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் காணப்படும்.

வெள்ளை ஈ, வெள்ளை நிறத்தில் சிறிய ஈ போன்று இருக்கும். இந்த பூச்சிகளுக்கு இறக்கை இருப்பதால் ஒரு செடியில் இருந்து மற்றொரு செடிக்கு பறந்து சென்று "மொசைக்' என்ற வைரஸ் நச்சுயிரி நோயினைப் பரப்பும். இதனால் இலைகளில் உள்ள பச்சையம் குறைந்து மஞ்சள் நிறமாக மாறுகிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்: இந் நோய் தாக்கிய மரவள்ளிச் செடிகளை பிடுங்கி எடுத்துவிட வேண்டும். துத்தி செடிகளையும், மற்ற களைச் செடிகளையும் வரப்பு மற்றும் வயல்வெளிகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

வெள்ளை ஈ தாக்குதல் உள்ள வயல்களில் மணத்தக்காளி செடிகளை ஆங்காங்கே பயிர் செய்வதால், மணத்தக்காளி செடிகளில் வெள்ளை ஈக்கள் தாக்குதலை ஏற்படுத்தும். மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறிகளை, ஒரு ஏக்கருக்கு 5 என்ற அளவில் மரவள்ளிச் செடிகளை நோக்கி இருக்குமாறு காலை 4 மணி முதல் 6 மணி வரை அமைப்பதால் மஞ்சள் வண்ணத்தை நோக்கி வெள்ளை ஈக்கள் கவரப்படும். அதிகமான தழைச்சத்து உரங்களையும், தேவைக்கு அதிகமான நீர் பாசனங்களையும் பயிர்களுக்கு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

மாவுப்பூச்சி: மாவுப் பூச்சியானது வெள்ளை ஈ போல் ஒரு இடம் விட்டு ஒரு இடம் நகராமல் இலையின் கீழ்ப்பரப்பில் அடைபோல் வெண்மை நிற படலமாக ஒட்டிக்கொண்டு இலையின் சாற்றினை உறிஞ்சும். மரவள்ளி செடியில் பொதுவாக ஐந்தாவது இலைகளிலிருந்து மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: மாவுப்பூச்சி தாக்குதல் உள்ள இலைகளையும், செடியின் கீழ் பாகத்தில் உள்ள இலைகளையும் ஒடித்து விட வேண்டும்.

பொதுவாக 33 சதம் ஸ்டார்ச் உள்ள மரங்களில் உள்ள விதை கரணைகளையே பயன்படுத்த வேண்டும். சாய்வு முறையில் நடவுச் செய்வதால் இப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

முசுக்கொட்டை செடிகள் (மல்பெரி செடிகள்), நெய்வேலி காட்டாமணக்கு போன்ற செடிகளை வரப்பு ஓரங்களில் பயிர் செய்து இதன் தாக்குதலை குறைக்கலாம்.

திறன்மிகு ஒட்டுண்ணியான "அசிரோபேகஸ் பப்பையே' என்ற ஒட்டுண்ணியை செடிகளில் ஏவி விட வேண்டும். இரை விழுங்கிகளான "கிரிப்டோலீமஸ் மான்ட்ரோசூரி' என்ற ஆஸ்திரேலிய பொறி வண்டுகளை ஒரு ஏக்கருக்கு 500 என்ற எண்ணிக்கையில் ஏவி விட வேண்டும். ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் "வெர்டிசிலியம் லீக்கானி' என்ற உயிரக பூஞ்சாணத்தை தெளிப்பதால் மாவுப்பூச்சியின் மீது நோய் உருவாகி அதனை இறக்கச் செய்யும்.

தாக்குதல் மத்திமமாக இருப்பின் 3 சத வேப்ப எண்ணெய்யை ஒரு லிட்டர் நீருக்கு 25 மி.லி. அல்லது மீன் எண்ணை சோப்பு ஒரு லிட்டர் நீருக்கு 40 கிராம் கலந்து இலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

தாக்குதல் அதிகமாக இருப்பின் ரசாயண பூச்சிக்கொல்லியான "புரபனோபாஸ்' ஒரு லிட்டர் நீருக்கு 2 மி.லி. கலந்து இலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

செஞ்சிலந்தி: செஞ்சிலந்திகள் மஞ்சள் வண்ணத்தில் மிகவும் சிறியதாகவும் கூட்டமாகவும் மரவள்ளி இலைப்பரப்பின் மத்தியில் இருந்துகொண்டு சாற்றினை உறிஞ்சும். இதனால் மரவள்ளி இலைகளில் வரிக்கோடுகள் காணப்படும்.

செஞ்சிலந்திகளை பொதுவாக நம் கண்களால் காண இயலாது. உருப்பெருக்கி அல்லது நுண்ணோக்கி மூலம் இவைகளை காண முடியும். இதனால் இலைகளில் பச்சையம் குறைந்து மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: தாக்குதல் மத்திமமாக இருப்பின் ஒரு சத புங்கம் எண்ணெய் ஒரு லிட்டர் நீருக்கு 2 மி.லி. என்ற அளவில் கலந்து இலைகளின் நடுப்பகுதி நனையும்படி தெளிக்க வேண்டும்.

தாக்குதல் அதிகமாக இருப்பின் ரசாயன பூச்சிக்கொல்லிகளான "டெகாசஸ் 3.5 இசி' ஒரு லிட்டர் நீருக்கு 2.5 மி.லி. அல்லது "புராப்பர்கைட் 5 இசி' ஒரு லிட்டருக்கு நீருக்கு 1.5 கிராம் என்ற அளவிலும், கார்பன்டஸிம் ஒரு லிட்டருக்கு நீருக்கு 2 கிராம் என்ற அளவிலும் கலந்து இலைகளின் நடுப்பகுதி நனையும்படி தெளிக்க வேண்டும் என்றார் அவர்.

## மண்வளம் காக்க மண் பரிசோதனை



விவசாயம் செழிக்கவும், மகசூல் அதிகரிக்கவும், மண்வளத்தை காக்கவும், விவசாயிகள் கண்டிப்பாக மண் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயத்துக்கு அடிப்படைத் தேவைகளாக நிலவளம், நீர்வளம் அமைகின்றன. நிலத்தின் வளத்தை நிர்ணயிப்பதில் மண் பரிசோதனையே முக்கியமானதாகும். ஏன் என்றால் மண்ணின் ரசாயன குணங்களும், பயிருக்குக் கிடைக்கக் கூடிய சத்துக்களின் அளவையும் மண் பரிசோதனையின் மூலமாகவே அறிய முடியும். வயலுக்கு வயல் சத்துக்களின் அளவு வேறுபடுவதாலும், மண் பரிசோதனையின் மூலமே பயிருக்கு ஏற்ப சமச்சீர் உரத்தை பரிந்துரை செய்ய முடியும்.

மேலும் இவ்வகையில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவதோடு அதிகப்படியான உரச்செலவையும் குறைக்கலாம்.

பரிசோதனையின் அவசியம்: மண்ணின் தன்மைகளைக் கண்டறிய, களர், உவர் மற்றும் அமில நிலங்களைக் கண்டறிந்து அவற்றை சீர்திருத்தவும், பயிருக்குக் கிடைக்ககூடிய சத்துக்களின் அளவை அறிந்து அதற்கேற்ப உரமிடவும் ஆகும்.

மண் மாதிரி எடுக்கும் குறியீடு: நிலத்தின் தன்மைக்கு ஏற்ப மணற்பாங்கான பகுதி கரிசல் மண் பகுதி, செம்மண் பகுதி ஆகியவற்றுக்கு மண் மாதிரியை தனித்தனியாக எடுக்க வேண்டும்.

வயலின் மேடான பகுதிக்கு தனியாகவும், தாழ்வானப் பகுதிக்கு தனியாகவும் மண்மாதிரி எடுக்க வேண்டும். ஒரே வயலின் முன்பு சாகுபடி செய்த பயிர், வேறுவேறாக இருந்தாலும், அதற்கேற்ப, தனித்தனியாக மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.

மண் மாதிரி எடுக்கும் காலம்: பயிர் அறுவடை முடிந்த பின்னர், நிலத்தை அடுத்த பயிருக்கு தயார் செய்வதற்கு முன்பு, தற்போதுள்ள பயிருக்கு உரமிட்ட 3 மாதங்களுக்கு பிறகும் மாதிரி எடுக்கலாம்.

மண் மாதிரி எடுக்கத் தேவையான கருவிகள்: மண்வெட்டி, தட்டு அல்லது வாளி, துணிப்பை அல்லது பாலித்தீன் பை.

மண் மாதிரி எடுக்கும்போது தவிர்க்க வேண்டிய இடங்கள்: எரு குவித்த இடங்கள், வரப்பு ஓரங்கள், மரங்கள் நிழல் படரும் பகுதிகள், நீர் கசிவு உள்ள இடங்கள்.

மண் மாதிரி எடுக்கும் ஆழம்:நெல், ராகி, கம்பு, கடலை, போன்ற குட்டை வேர் பயிர்கள்: 15 செமீ அல்லது 6 அங்குலம்.

பருத்தி,கரும்பு, மிளகாய், மரவள்ளி போன்ற ஆழமான வேர் பயிர்கள்: 22.5 செமீ அல்லது 9 அங்குலம்.

திராட்சை, மா, எலுமிச்சை, போன்ற பழத்தோட்ட மற்றும் தென்னை மரப்பயிர்கள்: 3 அடி ஆழத்துக்கு குழித் தோண்டி அதில் முதல் அடியில் ஒரு மாதிரியும், 2-வது அடியில் ஒரு மாதிரியும், 3-வது அடியில் ஒரு மாதிரியும் என 3 மண் மாதிரிகளை தனித்தனியாக எடுக்க வேண்டும்.

மண் மாதிரி எடுக்கும் முறை: மண் மாதிரி எடுக்க வேண்டிய இடத்தில் உள்ள இலை, சருகு, புல் முதலியவற்றை மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். சாகுபடி செய்யும் பயிரைப் பொறுத்து மேற்கூறிய ஆழத்துக்கு நிலத்தில் "வி' வடிவத்தில் (மண்வெட்டியால்) குழிவெட்டி அந்த மண்ணை அப்புறப்படுத்த வேண்டும்.

வெட்டிய "வி' வடிவ குழியின் ஓரமாக குழியின் மேலிருந்து கீழாக இரண்டு புறமும், ஓரே சீராக மண்வெட்டியால் ஒரு அங்குல கணத்துக்கு மண்ணை வெட்டி எடுத்து சுத்தமான வாளியில் போட வேண்டும்.

ஒரு வயலில் இதே போன்று குறைந்தது 10 அல்லது 15 இடங்களில் மண்ணை சேகரித்து ஒன்றாகக் கலந்து அதில் இருந்து அரை கிலோ மண்ணைப் பகுத்தல் முறையில் எடுத்து துணிப்பையில் இட்டு பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

மண் மாதிரியுடன் அனுப்ப வேண்டிய விவரங்கள்: பெயர், முகவரி, நிலத்தின் பெயர், சர்வே எண், உர சிபாரிசு தேவைப்படும் பயிர் ரகம், மானாவரி, இறவை.

நுண்ணூட்டச்சத்து ஆய்வுக்கு மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை: நுண்ணூட்டச்சத்து ஆய்வு செய்ய மண்மாதிரி சேகரிக்கும் போது இரும்பாலான மண்வெட்டி, தட்டு போன்ற பொருள்களை தவிர்த்து, பிளாஸ்டிக், அல்லது வேறு உலோகங்களால் ஆன பொருள்களைக் கொண்டு மேலே குறிப்பிட்ட முறைகளையே பின்பற்றி மண் மாதிரிகளை சேகரித்து பாலித்தீன் பைகளில் நிரப்பி ஆய்வுக்கு அனுப்ப வேண்டும்.

மண்மாதிரி ஆய்வுக் கட்டணம்: பேரூட்டச் சத்து ஆய்வு-ரூ.10, நுண்ணூட்டச் சத்து ஆய்வு-ரூ.10.

பாசன நீர் ஆய்வு: நீர் இறைக்கும் மோட்டார் கருவியை 20 நிமிடம் ஓட்டவும். பின்பு ஒரு சுத்தமான கண்ணாடி அல்லது பாலிதீன் பாட்டிலை எடுத்துக் கொண்டு அதை நீர் மாதிரி எடுக்க வேண்டிய தண்ணீரால் நன்கு கழுவிய பின் அரை லிட்டர் அளவுக்கு பாசன நீர் மாதிரியை எடுத்து ஆய்வுக்கு தர வேண்டும். பாசன நீர் ஆய்வுக் கட்டணம் ரூ.20 ஆகும்.

மண்வள அட்டை: மண் ஆய்வு செய்து அடுத்த பயிர்களுக்கு மண் வள அட்டை மூலம் உரப்பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. இந்த அட்டை மூன்று ஆண்டுகளுக்கு பொருந்தும்.

மண்வள அட்டையில் அளிக்கப்படும் பரிந்துரைகள்: களர், அமில மற்றும் உவர்நிலை கண்டறிந்து அதற்கேற்ப சீர்திருத்தங்கள், பரிந்துரைகள், சுண்ணாம்பு நிலை அறிந்து அதற்கேற்ப பரிந்துரை, சமச்சீர் உரமிடுதல் பரிந்துரைகள், இயற்கை உரப்பரிந்துரைகள், நுண்ணுயிர் மற்றும் நுண்ணூட்டச் சத்து பரிந்துரைகள், ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தின் மூலம் நீடித்த நிலையான வேளாண்மைக்கு வழிகாட்டல், பயிர் சுழற்சியில் இடம் பெறும் பயிர்களுக்கு உரப்பரிந்துரை.

மேலும் விவரங்களுக்கு அந்த மாவட்டத்தில் உள்ள மண் ஆய்வுக் கூடம் அல்லது நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை விவசாயிகள் அணுகலாம்.

## விவசாயிகள் கவனத்துக்கு...

மதுரை, அக்.9: உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையினை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சரின், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவுசெய்த சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள் பிளஸ் 2 முடித்து மேற்படிப்புக்குச் சென்றால், அவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்தகைய கல்வி உதவித்தொகையைப் பெற, அந்தந்த வட்டத்தில் உள்ள சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியருக்கு விண்ணப்பங்கள் மூலம் மனுச் செய்து பயன் பெறலாம். உழவர் அட்டை இல்லாத விவசாயிகள் சம்பந்தப்பட்ட சமூக பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியரை அணுகி

விண்ணப்பத்தினை கொடுக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தகவல்மையத் தொலைபேசி எண்: 0452-2526888, 2521444, சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் அலைப்பேசி தெற்கு-9486467675, வடக்கு-9943728330, மேலூர்-9843978465, வாடிப்பட்டி-9488480723, உசிலம்பட்டி-9677987145, திருமங்கலம்-944380100, பேரையூர்-9843907636 என்ற எண்களில் தொடர்பு கொண்டு உதவித் தொகையினை பெற்று பயன் பெறுமாறு ஆட்சியர் அன்சுல்மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

## சொட்டுநீர் உர நிர்வாக கருத்தரங்கம்

ஒட்டன்சத்திரத்தில், காய்கறி சாகுபடியில் சொட்டுநீர் உரநிர்வாகம் மற்றும் பயிர்பாதுகாப்பு தொழில்நுட்ப கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் மற்றும் திண்டுக்கல் கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை இணைந்து கருத்தரங்கை நடத்தின.

இதில், திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் வி.எம்.சந்திரசேகரன், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் டி.செல்வகுமரன், இப்கோ மாநில விற்பனை மேலாளர் பா.கிருஷ்ணன், முதன்மை மண்டல மேலாளர் ப.மதியழகன்,கள மேலாளர் ந.சுரேஷ்,

திண்டுக்கல் டான்பெட் மண்டல மேலாளர் செந்தூரன், ஒட்டன்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் பழனிச்சாமி, பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி உதவி பேராசிரியர்கள் பியூலா, விஜய சாமுண்டீஸ்வரி, கே.சுரேஷ், பழனி சரக கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் பொ. செல்வராஜா ஆகியோர் பேசினர்.

## நாற்றுத் துவரை நடவு பணி துவக்கம்

திண்டுக்கல், அக். 9: ஒட்டன்சத்திரத்தில் நாற்றுத் துவரை நடவு செய்யும் பணியை ஒன்றிய பெருந்தலைவர் கே.பி.நல்லசாமி துவக்கி வைத்தார். ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் இந்தாண்டு துவரை பயிர் நாற்றுவிட்டு நடவு செய்தல் முறையில் துவக்கப்பட்டு தற்போது விவசாயிகள் வயல்களில் நடவுக்கு தயார் நிலையில் உள்ளது. இத்திடல்கள் அமைக்கும் விவசாயிக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் மானியமாக வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் விழாவில் பேசுகையில் தெரிவித்தார். நிகழ்ச்சியில் ஜவ்வாதுபட்டி ஊராட்சித்

தலைவர் எஸ்.வீரராஜ், ஒன்றிய உறுப்பினர் எம்.குணசேகரன், காப்பிளியபட்டி ஊராட்சித் தலைவர் சி.தமிழ்அமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி முகாம்

விருதுநகர், அக். 9: அருப்புக்கோட்டை அருகே சிதம்பராபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான திருந்திய நெல் சாகுபடி பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

சிதம்பராபுரம் ஊராட்சியில் உள்ள சமுதாயக் கூடத்தில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் நடந்த இப்பயிற்சி முகாமிற்கு மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கனகராசன் தலைமை வகித்தார். மண்டல ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் செல்லையா முன்னிலை வகித்தார்.

இதில், விவசாயிகள் மேட்டுப்பாத்தி நாற்றாங்கால் தயார் செய்யும் முறைகள், இள வயது நாற்றுகளை வயல்களில் நடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து வேளாண் துறை அலுவலர்கள் விளக்கமாக எடுத்துரைத்தனர். அதையடுத்து மேட்டுப்பாத்தி செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்ட விருதுநகர் மாவட்ட தொழில் நுட்ப ஆலோசகர் சோலையப்பன், அருப்புக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மணிசேகரன், சிதம்பராபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் சீனிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முகாமுக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் கோகிலா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் லோகநாதன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## விவசாயிகளுக்குப் பயிற்சி

பல்லடம், அக். 9: பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷பயிற்சிக்கு, கோவை இணை இயக்குநர் அல்டாப் தலைமை வகித்தார். மக்காச்சோளம், தேங்காய் கொப்பரை ஆகியவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றுவது குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பொங்கலூர் வேளாண் விற்பனைக் கூட கண்காணிப்பாளர் (பொ) சரவணன் உள்ளிட்டோர் பேசினர். சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 26.60 அடி

ஈரோடு, அக்.9: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 26.60 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 93 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 500 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 0.86 டி.எம்.சி.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம், வெள்ளிக்கிழமை (அக்டோபர் 19) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தலைமை வகிக்கிறார். இக் கூட்டத்தில் அனைத்து அரசுத் துறை அதிகாரிகளும் பங்கேற்று, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்துப் பேசுகின்றனர்.

எனவே, விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் தங்களின் பொது கோரிக்கைகள் இருப்பின் அதுகுறித்த கோரிக்கை மனுக்களை புதன்கிழமை (அக்டோபர் 10) மாலை 5.30 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதுதவிர, மாவட்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்கள் மனுக்களை அளிக்கலாம்.

இதுதவிர, 19-ம் தேதி நடைபெறும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்திலும் விவசாயிகள் நேரடியாக கலந்து கொண்டு புகார்களைத் தெரிவித்துப் பயன் பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

## பள்ளப்பட்டியில் ரூ. 65 லட்சம் மஞ்சள் ஏலம்

சேலம், அக். 9: பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் விவசாயிகள் கொண்டு வந்த மஞ்சள் மூட்டைகள் ரூ. 65 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டன.

பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் ஏலம் தனி அலுவலர் கே.முத்துராஜ் தலைமையில் நடைபெற்றது. ஏலத்தில் வெள்ளாளப்பட்டி,

கெஜல்நாயக்கன்பட்டி, கோலத்துக்கோம்பை, சட்டூர், சாமகுட்டபட்டி, கூட்டாறு, ஆத்தூர், மஜ்ஜினி, குள்ளம்பட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுமார் 250 விவசாயிகள், உற்பத்தி செய்த 1,500 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

சேலம், ஈரோடு, ஆத்தூர், கொங்கணாபுரம், தருமபுரி, பெருந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலம் கோரினர். இதில், விவசாயிகள் கொண்டு வந்த விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ. 5,900 முதல் ரூ. 6,700 வரையிலும், குண்டு மஞ்சள் ரூ. 4,950 முதல் ரூ. 5,300 வரையிலும், பனங்காலி மஞ்சள் ரூ. 8,500 முதல் ரூ. 11,300 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

விவசாயிகள் கொண்டு வந்த மஞ்சள் மூட்டைகள் ரூ. 65 லட்சத்துக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

நிலக்கடலை ரூ. 15 லட்சத்துக்கு ஏலம்: இதேபோல, பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் விவசாயிகள் கொண்டு வந்த நிலக்கடலை மூட்டைகள் ரூ. 15 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டன.

ஈர நிலக்கடலை 60 கிலோ மூட்டை ரூ.1,290 முதல் ரூ.1,692 வரையில் விற்பனை செய்யப்பட்டது.

இந்த ஏலத்தில் அரூர், அம்மாபாளையம், ஓமலூர், கருப்பூர், பாகல்பட்டி, பனைமரத்துப்பட்டி, குரால்நத்தம், வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 190 விவசாயிகள், உற்பத்தி செய்த 1500 மூட்டைகளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். இவை ரூ. 15 லட்சத்துக்கு விற்பனையானது.

தினமும் நிலக்கடலை ஏலம்: சேலம் பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலக்கடலை ஏலத்தை ஞாயிற்றுகிழமை தவிர்த்து ஏனைய நாள்களில் தினமும் நடத்த முடிவெடுத்துள்ளதாக தனி அலுவலர் முத்துராஜ் தெரிவித்தார்.

மஞ்சள் ஏலம் வழக்கம்போல செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் என்ற அவர், கடந்த ஓராண்டில் இந்த வேளாண் சங்கத்தில் ரூ. 13 கோடிக்கு மஞ்சள் ஏலம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், ஓமலூரில் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலக்கடலை ஏலத்தை நடத்த உத்தேசித்து வருவதாகவும் அவர் கூறினார்.

## அக்.17-ல் உணவுக் காளான் வளர்ப்பு பயிற்சி

ஆலங்குடி அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் உணவுக்காளான் வளர்ப்பு பயிற்சி அக்.17-ல் தொடங்கி 3 நாள் நடைபெறுகிறது.

இதுகுறித்த பயிற்சி நிலைய செய்திக் குறிப்பு: தொழில் முனைவோரை உருவாக்கும் இந்தப் பயிற்சியில் உணவுக் காளான்களின் வகைகள், வளர்ப்பு முறைகள், தேவைப்படும் பொருட்கள், குடில் அமைப்பு மற்றும் பராமரிப்பு, சந்தை வாய்ப்பு மற்றும் காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு முறைகள் விரிவாகப் பயிற்றுவிக்கப்படும்.

காளாண் வளர்ப்பில் ஆர்வமுள்ள ஊரக இளைஞர்கள், மகளிர் மற்றும் விவசாயிகள் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் பெயரை முன்பதிவு செய்ய

நேரில், அல்லது 04322 290321 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 71.51 அடி

மேட்டூர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 71.51 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 12,427 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 18,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 501 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 7,001 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,219 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,515 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி: முதல்வர் திறந்துவைத்தார்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை சென்னை தலைமைச் செயலகத்தில் காணொளி காட்சி மூலம் திறந்துவைத்தார்.

ஒரத்தநாட்டில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணை வளாகத்தில் 177.92 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் கல்லூரி அமைக்கப்படும் என கடந்த ஆண்டு தமிழக அரசு அறிவித்தது.

இதனடிப்படையில், கட்டடங்கள் கட்டப்பட்டு முதலாமாண்டு மாணவர்களுக்குத் தேவையான 7 துறைகள், விடுதி வசதி, கால்நடை சிகிச்சை வளாகம் மற்றும் கால்நடை பண்ணை வளாகம்

போன்ற உட்கட்ட வசதிகள் செய்யப்பட்டன. மேலும், அரசு கால்நடை மருத்துவக் கழகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு, முதலாமாண்டு மாணவர் சேர்க்கையும் நிறைவு பெற்றது.

முதலாம் ஆண்டு பட்டப் படிப்பில் 22 மாணவர்கள், 18 மாணவிகள் உள்பட 40 பேர் பல்கலைக்கழகத்தால் ஒற்றைச் சாளர முறையில் தேர்வுசெய்யப்பட்டனர். மேலும், கல்லூரிக்கான முதன்மை கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் ரூ. 12 கோடியில் கட்டுமானப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், ஒரத்தநாட்டில் புதிதாகக் கட்டப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்பையும் தமிழக முதல்வர் ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலமாக திறந்துவைத்தார்.

ஒரத்தநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன், தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் 177 ஏக்கரில் இயற்கையான சூழலில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கி, கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்கியதோடு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி, தஞ்சை மாவட்டத்தில் கல்வி புரட்சி ஏற்படுத்திய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சி. வீரபாண்டியன், பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிர் உறுப்பு கல்லூரி முதல்வர் மணிமேகலை, ஒரத்தநாடு ஒன்றியக் குழுத் தலைவர் சூரியமூர்த்தி, அதிமுக நகரச் செயலாளர் செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 750 விலையில்லா கறவை மாடுகள் வழங்கல்

திருச்சி மாவட்டத்தில் இதுவரையில் 750 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிராமப்புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் உள்ளிட்ட ஏழை பெண்களின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தி பொருளாதார ரீதியாக தன்னிறவு பெறும் வகையில் விலையில்லா மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருச்சி மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 15 ஊராட்சிகளில் 750 கறவை மாடுகளும், மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 7,648 அலகுகள் விலையில்லா ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த பயனாளிகளில் 117 பேர் மாற்றுத் திறனாளிகள், 11 திருநங்கைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வெள்ளாடுகள் 4,945 குட்டிகளை ஈன்றுள்ளன. சிறந்த முறையில் கறவை மாடுகளை பராமரிக்கும் பயனாளிகள் மூவருக்கு ரூ. 3,000, ரூ. 2,000, ரூ. 1,000 மதிப்புள்ள தீவனங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுகள் மூலம் நாளொன்றுக்கு 2,800 லிட்டர் பால் ஆவின் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலம் மாவட்டத்தில் 152 மி.மீட்டர் மழை

சேலம், அக். 9: சேலம் மாநகரம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. இதில் மாவட்டம் முழுவதும் மொத்தம் 152 மி.மீட்டர் மழை பதிவானது.

சேலத்தில் திங்கள்கிழமை இரவு சுமார் 2 மணி நேரம் பலத்த மழை கொட்டியது. காலையில் வழக்கம்போல் அதிக வெப்பத்துடன் காணப்பட்ட வானிலையில் இரவில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

இரவு சுமார் 9 மணியளவில் மாநகரின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. இரண்டு மணி நேரம் நீடித்த இந்த மழையால் நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதைப் போலவே வாழப்பாடி, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி உள்ளிட்ட மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் மழை பெய்தது.

செவ்வாய்க்கிழமை இரவும் மாநகரின் சில இடங்களில் மழைத் தூறல் இருந்தது.

சேலம் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரையிலும் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

எடப்பாடி- 64, ஓமலூர்- 20, சங்ககிரி- 17, மேட்டூர்- 16.20, சேலம்- 13.50, வாழப்பாடி- 11, ஏற்காடு- 8.40, தம்மம்பட்டி 2.30, மொத்தம் - 152.40.

## தேக்கடியில் கன மழை

தேனி, அக். 9: தேக்கடியில் கடந்த சில நாள்களாக கன மழை பெய்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை ஒரு சில இடங்களில் மட்டும் லேசான மழை பெய்தது.

ஆண்டிபட்டியில் 18.8 மி.மீ., உத்தமபாளையத்தில் 14.1, கூடலூரில் 1.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தேக்கடியில் அதிக அளவில் 54.6 மி.மீ., மழை பெய்துள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் 1.6 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

வைகை அணை நீர் மட்டம் செவ்வாய்க்கிழமை 32.19 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 246 கன அடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 37.25

அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 9 கன அடி. அணையில் இருந்து தண்ணீர் திறப்பு விநாடிக்கு 2 கன அடி. சோத்துப்பாறை அணை நீர் மட்டம் 26.73 அடி. அணைக்கு விநாடிக்கு 3 கன அடி வீதம் தண்ணீர் வரத்து மற்றும் திறப்பு உள்ளது.

பெரியாறு அணை நீர் மட்டம் 117.1 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 610 கன அடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

11.10.2012 A.M

## சம்பா சாகுபடிக்கு 3,571 டன் உரம் .ஆப்பிரிக்காவிலிருந்து வருகை

கும்பகோணம்: சம்பா சாகுபடிக்காக, தென்னாப்பிரிக்கா நாட்டிலிருந்து, 3,571 டன் டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் உரம் கும்பகோணத்துக்கு வந்தது.காவிரி டெல்டா மாவட்டங்களில், நடப்பாண்டு குறுவை சாகுபடி பம்பு செட் மூலம் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து சம்பா சாகுபடி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. டெல்டா மாவட்டங்களில், ஐந்து லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.இந்த சாகுபடிக்கு தேவையான அடியுரம், விதை ஆகியவற்றை தேவையான அளவு விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது.மேலும் டெல்டா மாவட்டத்தில் உள்ள, 15 தனியார் உர விற்பனை மொத்த விற்பனையாளர்களும், அவர்களிடம் உரங்களை எடுத்து சில்லறை விற்பனை செய்யும், 250 தனியார் கடைகளுக்குமான உரங்களை, இறக்குமதி செய்து தர மத்திய அரசு முடிவு செய்தது.அதன்படி தென்னாப்பிரிக்க நாட்டிலிருந்து ஆந்திர மாநிலம் கிருஷ்ணாபட்டணம் துறைமுகத்திற்கு உரம் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட உரங்களை நாகர்ஜனுனா ஃப்ர்ட்டிலைசர் லிமிடெட் றுவனம் மூலம், டி.ஏ.பி., 678 டன், யூரியா, 2,080 டன், பொட்டாஷ், 813 டன் என மொத்தம், 3,571 டன் உரங்கள், 58 ரயில் வேகன் மூலம் கும்பகோணம் ரயில் லையத்துக்கு வந்தது.கும்பகோணம் ரயில் லையம் வந்த உரங்கள், தனியார் உர விற்பனையாளர் வழியாக, 150 லாரிகள் உர மூட்டைகள் ஏற்றப்பட்டு, தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள, 250 தனியார் உர விற்பனை லையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## தடியன்குடிசையில் 17.5 மி.மீ., மழை

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலை பகுதியில் கடந்த இரு தினங்களாக கன மழை பெய்து வருகிறது. கடந்த 8ல் தடியன்குடிசையில் 77 மி.மீ.,தாண்டிக்குடியில் 85 மி.மீ.,ம், அக். 9ல் தடியன் குடிசை, புல்லாவெளியில் அதிகபட்சமாக 175 மி.மீ.,(17.5 செ.மீ) மழை பதிவானது. காட்டாற்று வெள்ளத்தால் பல ரோடுகள் காணாமல் போயின. ஆங்காங்கே "திடீர்' அருவிகள் தோன்றி, கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. நெடுஞ்சாலை துறையினர் இடர்பாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மழையை விவசாயிகள் வரவேற்றுள்ளனர். காபி, ஆரஞ்சு பழங்கள் பழுக்க துவங்கியுள்ளன. தாண்டிக்குடி, பண்ணைக்காடு பகுதியில் பெய்த கனமழையால் அய்யம்பாளையம் மருதாநதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. ஆடலூர், பன்றிமலை, தடியன்குடிசையில் பெய்த மழைக்கு ஆத்தூர் நீர்தேக்கம் நிரம்பும் நிலையில் உள்ளது.

## கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

தேனி:தேனி மாவட்டத்தில் 12 கிராமங்களில், இம் மாதம் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது. சின்னமனூர் பொம்மனம்பட்டி, எஸ். அழகாபுரியில், இம் மாதம் 8 ல் நடந்தது. கன்னியம்பட்டி, போடி, பி.அணைக்கரைப்பட்டியில் 10 ல், நடந்தது. பெரியகுளம் இ.புதுக்கோட்டையில் இன்றும், உத்தமபாளையம் உ.புதூரில் 12ல், கடமலை மயிலாடும் பாறை தொப்பையாபுரத்தில் 13 ல், உத்தமபாளையத்தில் டி.சொல்லாயிரத்தில் 14 ல், உத்தமபாளையம் லெட்சுமிநாயக்கன்பட்டியில் 15 ல் நடக்கிறது. முகாம்களில் கலந்துகொள்ளும் கால்நடைகளுக்கு, சிகிச்சையளித்தல், குடற்புழுநீக்கப்பணி, மலடுநீக்க பணி, சினைபரிசோதனை, ஆண்மை நீக்கம்,செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட பரிசோதனைகள் நடைபெறுகிறது. கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளை முகாமிற்கு அழைத்து சென்று பயன்பெறலாம்,என கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள் ளார்.

## பலத்த காற்று வீசியதில்சாய்ந்த வாழை மரங்கள்

கூடலூர்:பலத்த காற்று வீசியதில், குள்ளப்பகவுண்டன்பட்டியில் உள்ள வாழை மரங்கள் சாய்ந்தன கூடலூர் அருகே லோயர்கேம்ப், குள்ளப்பகவுண்டன்பட்டி மலையோரப்பகுதிகளில், கடந்த இரண்டு நாட்களாக, இடி மின்னலுடன் மழை பெய்து வருகிறது. கூடுதல் மழையுடன், பலத்த காற்றும் வீசியதால், பலன் தரக்கூடிய நிலையில் இருந்த ஏராளமான வாழை மரங்கள் சாய்ந்தன. ஈஸ்வரன் கோயில் செல்லும் பாதை, புதூர் வட்டம் பகுதியில், நூற்றுக்கணக்கான நாழிப்பூ, ஏத்தம்

வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன. வாழைகள், சேதமடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.—

## மாவட்டத்தில் பலத்த மழை :விவசாய பணிகள் துவக்கம்

காரைக்குடி:சிவகங்கை:மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, சராசரியாக 18.40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில், கடந்த 2 நாட்களுக்கு முன்பிருந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் நடவு பணிகளில் ஆர்வம் காட்டதொடங்கியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு முழுவதும் நல்ல மழை பெய்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, காரைக்குடியில் 6.4 மி.மீ., மானாமதுரை - 40; சிவகங்கை-34; திருப்புவனம்- 20.2; திருப்புத்தூர்- 8; தேவகோட்டை - 20.2 மி.மீ., வரை பதிவாகியுள்ளது. மானாமதுரையில் அதிக பட்சம் 40 மி.மீ., என, மாவட்ட அளவில் சராசரியாக 18.40 மி.மீ., மழை பெய்துள்ளது. தொடர் மழையினால், சிறிய ஊரணி, குளங்கள் நிரம்பி வருகின்றன. இதையடுத்து,விவசாயிகள் நெல்நடவுக்காக உழவுபணியில், ஈடுபட்டுள்ளனர்வறட்சியால் வாழும் இடம் அருகே, வாடிய மரங்கள் கிடைக்கும் நிலையில், விலை வைத்த விறகுகள் விற்க முடியாமல் உள்ளன.காரைக்குடி மகர்நோன்பு பொட்டல் பகுதியில் உள்ள விறகு சந்தையில், புதுவயல், மாத்தூர், இலுப்பக்குடி, ஆவுடையார் கோயில் உள்ளிட்ட பகுதியில், உள்ளவர்கள் விறகுகளை கொண்டு வந்து விற்கின்றனர்.நாள் ஒன்றுக்கு இரண்டு டன்னிலிருந்து, சீசன் காலங்களில் ஐந்து டன் வரை வரத்து உள்ளது. கூறு 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையும், மொத்தமாக வியாபாரிகளிடம் விற்கப்படுகிறது. காலை 4 மணிக்கு கொண்டு வரும் விறகுகள், 9 மணிக்கெல்லாம் விற்று தீர்ந்து விடும்.நெசவுத்தொழிலில் சாயம் போடுபவர்கள், ஓட்டல் உரிமையாளர்கள், பட்டறை தொழிலாளர்கள் வாங்கி செல்கின்றனர். கடந்த நான்கு மாதங்களாக சராசரி மழையளவு கூட இல்லாததால், கிராமங்களில் உள்ள மரங்கள் காய்ந்து வருகின்றன. அவை வெட்டப்பட்டு அதிக அளவில் விற்பனை வருவதால், இவற்றை வாங்குவோர் இல்லை.இது குறித்து விறகு விற்பனையாளர் கூறும்போது: புரட்டாசி மாதம், மழை புரட்டிப்போடும் என்பார்கள், ஆனால், வெயில் விரட்டி அடிக்கிறது. மேலும் கிராமப்புறங்களில், விறகு தேவைப்படுவோர், அருகிலேயே கிடைப்பதால், சந்தைக்கு வந்து வாங்குவதில்லை. மாலை வரை விற்பனையாகாத விறகுகளால், போக்குவரத்து செலவைக்கூட ஈடு செய்ய முடியவில்லை, என்றார்.

## நிலக்கடலை, பயறு வகை பயிர்களுக்கு மானியம்

சிவகங்கை:""சிவகங்கை, வட்டத்தில் நிலக்கடலை, பயறு வகை உற்பத்தியில் மானியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்," என, விவசாய உதவி இயக்குனர் தனபாலன் தெரிவித்தார். சிவகங்கை வட்டாரத்தில், தேசியவிவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தில் நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிர்களில் மானாவாரி சாகுபடியில் உற்பத்தி திறனை அதிகரிக்க, 25 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரத்திற்கு விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிப்சம் போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. சிவகங்கை வட்டத்தில் 25 ஏக்கரில் செயல்படுத்தப்பட உள்து.இத்திட்டத்தில் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் தங்களது நில சிட்டா அடங்கல் விபரத்துடன், முன்னுரிமை பதிவேட்டில் தங்கள் பகுதி உதவி விவசாய அலுவலரிடம் பதிவு செய்துகொள்ளவேண்டும், என்றார்.

## வறட்சியால் வாடும் மாமரங்கள்: மானியம் கேட்கும் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் வறட்சியால் வாடும், மாமரங்களை காப்பாற்ற, டீசலுக்கு மானியம் வழங்க, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு பகுதியில், 500க்கும் அதிகமான ஏக்கர்களில், மா, நெல்லி, தென்னை, கொய்யா போன்ற பயிர்களை ,விவசாயம் செய்கின்றனர் விவசாயிகள். கடந்த சில மாதங்களாகசரி வர மழை பெய்யாததால், கடுமையான வறட்சி ஏற்பட்டு உள்ளது. கிணறுகளில் நீர்மட்டமும் குறைந்து வருகிறது. கடுமையான மின் வெட்டால் கிணறுகளில் இருக்கும் குறைந்தளவு தண்ணீரையும், மரங்களுக்கு பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது டீசல் விலையும் அதிகரித்து விட்டதால், தண்ணீர் பாய்ச்சுவதற்கு அதிகம் செலவாகுவதால், மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி மா மரங்களை காப்பாற்ற, டீசலுக்கு மானியம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளனர். விவசாயி சக்திவேல்,"" மம்சாபுரத்தில் ஏழு ஏக்கரில் மா மரங்கள் உள்ளன. கடும் வறட்சியால், டீசல் ஜெனரேட்டர் மூலம், கிணற்று தண்ணீரை பாய்ச்சி வந்தேன். டீசல் விலை அதிகரித்ததால் செலவு அதிகமாகிறது. இதில் அந்தளவிற்கு வருமானம் கிடைப்பது சந்தேகமே.தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தியதால் நான்கு மாமரங்கள் காய்ந்து போயின. நஷ்டம் ஏற்பட்டுள்ள ," என்றார்.

## ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி



ஈரோடு:கடந்த மாதம் ஏறுமுகத்தில் இருந்த மஞ்சள் விலை, தற்போது மீண்டும் சரிவை சந்தித்து வருகிறது. கடந்த, ஐந்து நாட்களில் மஞ்சள் குவிண்டாலுக்கு,635 ரூபாய் வரை வீழ்ச்சி கண்டுள்ளது. விலை உயர்வை எதிர் பார்த்து விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க துவங்கி உள்ளனர்.

தர்மபுரி:தமிழகத்தில், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில், 88 சதவீதம் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், ஈரோடு மாவட்டம், மஞ்சள் உற்பத்தியிலும், விற்பனையிலும் முதலிடம் வகிக்கிறது.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து, விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும் மஞ்சள், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை நிலையம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் வியாபாரிகளால், கொள்முதல் செய்யப்படும் மஞ்சள், தரம்பிரிக்கப்பட்டு, பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. நடப்பாண்டு துவக்கத்தில் இருந்து மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்து வந்தது.

அரசு, "டான்பெட்' மூலம் கொள்முதல் செய்யத் துவங்கியதை அடுத்து, வெளிச் சந்தையில் மஞ்சள் விலை கிடுகிடுவென உயர்ந்து, ஆகஸ்ட் இறுதியில், ஒரு குவிண்டால், 7,189 ரூபாய் வரை சென்றது.இந்நிலையில், திடீரென மஞ்சள் விலை குறைந்து வருகிறது. இதனால், மண்டிகளில், மஞ்சள் வரத்தும் கணிசமாக குறைந்துள்ளது. நாள்தோறும், சராசரி, 1,000 மூட்டைகளுக்கு மேல் வந்த மஞ்சள், தற்போது, 350 மூட்டைகளாக குறைந்து விட்டது.

கடந்த 3ம் தேதி, 6,066 ரூபாய்க்கு விற்பனையான, ஒரு குவிண்டால் விரலி மஞ்சள், 635 ரூபாய் குறைந்து, 5,431 ரூபாய்க்கும், குவிண்டால் கிழங்கு மஞ்சள் அதிகபட்சம், 5,326 ரூபாய்க்கும் விற்பனையாகின்றன.தீபாவளி பண்டிகை நெருங்க, நெருங்க விலையும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்கத் துவங்கி உள்ளனர்.

## சாக்லெட்' துறையின் சந்தைரூ.7,500 கோடியை தாண்டும்



புதுடில்லி:வரும் 2015ம் ஆண்டில், நாட்டின், சாக்லெட் துறையின் சந்தை மதிப்பு, 7,500 கோடி ரூபாயை தாண்டும் என, "அசோசெம்' மதிப்பிட்டுள்ளது.

உள்நாட்டில், சாக்லெட் பயன்பாடு ஆண்டுதோறும், 25 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. குறிப்பாக, நகரங்களில் வசிக்கும், 65 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் சாக்லெட் பயன்படுத்துகின்றனர். புறநகர் பகுதிகளிலும், இதன் பயன்பாடு சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது.

பண்டிகை காலம் துவங்க உள்ள நிலையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டில், நகரங்களில், சாக்லெட் பயன்பாடு, 35 சதவீதம் உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. பாரம்பரிய இனிப்பு வகைகளுக்கு பதிலாக, பெரும்பாலோர் சாக்லெட் பயன்படுத்துவதே இதற்கு காரணமாகும்.மேலும், மக்களின் வருமானம் அதிகரிப்பு, கண்கவர் வண்ணங்களில் சாக்லெட்களை சிப்பமிடுதல், நியாயமான விலை உள்ளிட்டவற்றால், சாக்லெட் பயன்பாடு உயர்ந்து வருகிறது. இதன் விளைவாக, வரும், 2015ம் ஆண்டில், நாட்டின், சாக்லெட் துறையின் சந்தை மதிப்பு, 7,500 கோடி ரூபாயை தாண்டும் என, அசோசெம் மதிப்பிட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

11.10.2012 A.M

## கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து இல்லை



ஈரோடு : நெல்லுக்கு போதிய விலை கிடைக்காததால், ஈரோடு மாவட்டத்தில் அரசு கொள்முதல் நிலையங்களில் இதுவரை நெல்கொள்முதல் ஏதும் செய்யப்படவில்லை.


ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி அரக்கன்கோட்டை மற்றும் மேட்டூர் மேற்குகரை வாய்க்கால் பாசனத்தின் மூலமாக நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலமாக நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே, பொலவக்காளிபாளையம், நஞ்சகவுண்டன்பாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, காசிபாளையம், அத்தாணி ஆகிய 6 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. ஆனால், இதுவரை நெல் ஏதும் கொள்முதல் செய்யப்படவில்லை. கடந்த ஆண்டு இதே காலத்தில் 20 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஏ கிரேடு என்று அழைக்கப்படும் சன்ன ரக நெல்களுக்கு கிலோ ரூ.11.80க்கும், சாதாரண ரக நெல் கிலோ ரூ.11.30க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு ரூ.13 மற்றும் ரூ.13.50க்கு கொள்முதல் விலை அறிவிக்கப்பட்டது.

ஆனால், தனியாரிடம் கிலோவுக்கு ரூ.16, ரூ.16.50க்கு விலை கிடைப்பதால் விவசாயிகள் அவர்களிடம் விற்கின்றனர்.

இதுகுறித்து நுகர்பொருள் வாணிப கழகத்தினர் கூறுகையில், ‘வெளி மார்க்கெட்டில் நெல்லுக்கு நல்லவிலை கிடைப்பதால் பெரும்பாலான விவசாயிகள் தனியாரை நாடி செல்கின்றனர். கடந்த ஆண்டு 29 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக 65 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு அவ்வளவு வரத்து இருக்குமா என்பது சந்தேகம்தான். இதனால் 6 கொள்முதல் நிலையங்களும் மூடப்படவுள்ளது என்று தெரிவித்தனர்.


## 3,571 டன் உரம் கும்பகோணம் வந்தது




கும்பகோணம் : தென்னாப்பிரிக்காவில் இருந்து ஆந்திர மாநிலம் கிருஷ்ணாபட்டணம் துறைமுகத்திற்கு உரம் இறக்குமதி செய்யப்பட்டது. அங்கிருந்து தனியார் நிறுவனம் மூலம் டிஏபி 678 டன், யூரியா 2,080 டன், பொட்டாஷ் 813 டன் என மொத்தம் 3,571 டன் உரம் 58 வேகன்களில் கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு நேற்று வந்தது.

இந்த உர மூட்டைகள் 150 லாரிகள் மூலம், தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள 250 தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## காவிரி நீர்பிடிப்பு பகுதியில் செயற்கை மழைக்கு மத்திய அரசு அனுமதி



பெங்களூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் செயற்கை மழை திட்டத்துக்கு கர்நாடகாவுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்து பெங்களூரில் நேற்று பாசனத்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை  கூறியதாவது:மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் இவ்வாண்டு போதிய மழை பெய்யாததால், கே.ஆர்.எஸ், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகள் நிரம்பவில்லை. அதன் காரணமாக விவசாயிகள் பயிர் செய்ய முடியாமல் தவித்து வருகிறார்கள். மாநிலத்தின் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் போதிய மழை இல்லாததால், விவசாயிகள் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதை கருத்தில் கொண்டு செயற்கை மழை பெய்விக்கும் திட்டம் செயல்படுத்த அனுமதிகோரி மத்திய அரசிடம் விண்ணப்பிக்கப்பட்டது. நமது மாநில கோரிக்கையை பரிசீலனை செய்த மத்திய உள்துறை அமைச்சகம் செயற்கை மழை பெய்விக்க அனுமதி வழங்கியுள்ளது. அதை தொடர்ந்து அக்னி ஏவியேஷன் நிறுவனத்தின் ஹெலிகாப்டர் மூலம் செயற்கை மழை பெய்விக்கப்படும். இத்திட்டத்தை ஒருமாதம் வரை செயல்படுத்தும் யோசனை உள்ளது. இது தொடர்பாக டெண்டர் விடும் பணி நடந்துள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

**பென்னாகரம் அருகே கறவை மாடுகள் கடன் திட்ட துவக்க விழா**

தர்மபுரி, : இயற்கை வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் கடன் திட்ட துவக்க விழா நடந்தது.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட கோடுபட்டி, சக்கல்நத்தம், உத்தாரி கொட்டாய் கிராமங்களை சேர்ந்த இயற்கை வள மேம்பாட்டு மகளிர் சங்கத்திற்கு கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன் திட்ட துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு பெரியசாமி தலைமை வகித்தார். வட்டுவன அள்ளி ஊராட்சி தலைவர் முருகன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் சங்கர், கணேசன், சின்னசாமி, சீராளன், சிவநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் 60 பேருக்கு ரூ10 லட்சம் மதிப்பிலான கறவை மாடு மற்றும் வேளாண் கடன் வழங்கப்பட்டது.

**நக்சல் பாதிப்பு கிராம மக்களுக்கு ரூ 8 லட்சம் மதிப்பில் விவசாய உபகரணங்கள் வழங்க முடிவு**

தர்மபுரி, : நக்சல் பாதிப்பு கிராம மக்களுக்கு ரூ8 லட்சம் மதிப்பில் விவசாய உபகரணங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த 7ம் தேதி தனியார் பள்ளியில் ரகசிய கூட்டம் நடத்திய 3 நக்சலைட் உள்ளிட்ட 13 பேரை க்யூ பிரிவு போலீசார் கைது செய்தனர். இதையடுத்து தமிழகத்தில் நக்சல் நடமாட்டம் உள்ள பகுதிகயை கண்காணிக்க மாநில உயர் போலீஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட போலீசாருக்கு உத்தரவிட்டனர். இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் 36 கிராமங்களில் நக்சல் பாதிப்பு இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த கிராமங்களில் மேலும் நக்சலைட்டுகள் உருவாகாமல் இருக்கவும், அப்பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சீருடைப் பணியில் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளை நக்சல் தடுப்பு தனிப்பிரிவு போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசும் இப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வளர்ச்சிக்காக சமூக பொருளாதார திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சென்னையில் நக்சல்கள் பிடிபட்டதை அடுத்து கிராமப்பகுதி மற்றும் மலைப்பகுதிகளில் வெளியாட்கள் நடமாட்டம் உள்ளதா என நக்சல் தடுப்பு மற்றும் க்யூ பிரிவு போலீசாரும் தனித்தனிக் குழுவாக சென்று கண்காணித்து வருகின்றனர். இதற்கிடையே மாவட்ட எஸ்பி ஆஸ்ரா கார்க் உத்தரவின்படி மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் 26 பேரிடம் 400 டெட்டனேட்டர்கள், வெடி மருந்துகள், 25 டிராக்டர்கள் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். இதில் சம்பந்தப்பட்டவர்களை போலீசார் கைது செய்தனர்.

மேலும் மாவட்டம் முழுவதும் போலீசார் வெடி பொருட்கள் வைத்திருப்பவர்களை கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், வரும் சில வாரங்களில் 36 நக்சல் பாதிப்பு கிராம மக்களுக்கு சுமார் ரூ 8 லட்சம் மதிப்பில் 625 பேருக்கு விவசாய உபகரணங்கள் தர நக்சல் தடுப்பு பிரிவு போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், 'நக்சல் பாதிப்பு பகுதிகளில் மர்ம நபர்கள் நடமாட்டம் உள்ளதா என கண்காணித்து வருகிறோம். இப்பகுதிமக்கள் வாழ்வாதாரம் மேம்பட நக்சல் தடுப்பு பிரிவில் இருந்து மேம்பாட்டு நிதியாக ரூ8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வரும் சில வாரங்களில் 625 விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படும்' என்றனர்.

## கரூர் மாவட்டத்தில் 2வது நாளாக பலத்த மழை ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கரூர், : கரூர் மாவட்டத்தில் 2வது நாளாக நேற்று பலத்த மழை பெய்ததால் ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 17,625 எக்டேரில் நெல் சாகுபடியானது. இந்த ஆண்டு

தென்மேற்கு பருவ மழை பெய்யவில்லை. கோடை வெயிலை போல வெயில் சுட்டெரித்து வந்தது. அவ்வப்போது மிதமான மழை மட்டுமே இருந்தது. இந்நிலையில் கடந்த 9ம்தேதி பலத்த மழை கொட்டியது. அன்று மயிலம்பட்டி பகுதியில் அதிகபட்ச அளவாக 92.3மி.மீ மழை பதிவானது. சராசரியாக 39.8 மி.மீ மழை பெய்தது.

இந்த மழை நேற்றும் தொடர்ந்தது. மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பொழிந்தது. கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மி.மீ):

கரூர் 42.4, அரவக்குறிச்சி 28.8, அணைப்பாளையம் 38.2, பரமத்தி 18.2, கிருஷ்ணராயபுரம் 5, பஞ்சப்பட்டி 11, மாயனூர் 4.4, குளித்தலை 2.2, தோகமலை 27, கடவூர் 20.2, மயிலம்பட்டி 36.8, பாலவிடுதி 90.1, என மொத்தம் 304.1 மி.மீ. மழை பொழிந்தது. சராசரியாக 27.02 மி.மீ மழை பொழிவு இருந்தது. முதல் நாள் பெய்த மழையை விட இது குறைவுதான் என்றாலும் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் குளம், ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் கரூர், தாந்தோணி, க.பரமத்தி, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகமலை, கடவூர் ஆகிய ஒன்றியங்கள் உள்ளன. கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை தாலுகாக்கள் டெல்டா பகுதியில் உள்ளன.

காவிரி பாசன பகுதியான இந்த வட்டாரத்தில் நெல், கரும்பு, வாழை பயிர்கள் காவிரியாற்று நீரை நம்பி பயிரிடப்படுகின்றன. அரவக்குறிச்சி, பரமத்தி, தாந்தோணி பகுதிகள் அமராவதி ஆற்று பாசனத்தை நம்பி உள்ளன. தோகமலை, கடவூர், ஒன்றியத்தில் கிணற்று பாசனத்தை அடிப்படையாக வைத்து சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன.

## கடைமடைக்கு தண்ணீர் வராததால் கருகிவரும் இளம் சம்பா பயிர்கள் கீழ்வேளூர் பகுதி விவசாயிகள் கவலை

கீழ்வேளூர், : கடைமடைக்கு தண்ணீர் வராததால் கீழ்வேளூர் பகுதிகளில் நேரடியாக விதைத்த சம்பா நெற்பயிர்கள் மற்றும் நாற்றங்கால் கருகி வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு கொடுக்காததாலும், மேட்டூரில் போதியளவு தண்ணீர் இல்லாததாலும் இந்தாண்டு தாமதமாக செப்டம்பர் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இதனால் காவிரி டெல்டாவில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட

விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்துள்ளனர். மேட்டூர் அணை திறக்கப்பட்டு 20 நாட்களுக்கு மேலாகியும் விவசாய பகுதிக்கு தண்ணீர் சென்றடையவில்லை.
நாகை மாவட்டம் கீழ்வேளூர், தலைஞாயிறு, நாகை, கீழையூர் பகுதிகளில் 10 நாட்களுக்கு முன் பெய்த மழையால் நேரடி நெல் விதைப்பு செய்த வயல்களில் 10 நாள் வயதுடைய நெய்பயிர்கள் முளைத்துள்ளது. தற்போது தண்ணீர் இல்லாததாலும், மழை பெய்யாததாலும் நேரடி நெல் விதைப்பு செய்துள்ள வயல்களில் வெடிப்பு ஏற்பட்டு நாற்றுகள் கருகும் அபாயத்தில் உள்ளது. இதுகுறித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க பொதுச்செயலாளர் தனபாலன் கூறுகையில், 'டெல்டா மாவட்டத்தில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு குறைந்தபட்ச பாசன கொள்ளளவு, அதிகபட்ச பாசன கொள்ளளவு தெரியவில்லை. புதிய அதிகாரிகளுக்கு காவிரி டெல்டா பாசனம் பற்றி பயிற்சி அளிக்க வேண்டும். இந்நிலையில் வெண்ணாற்றில் திறக்கப்படும் தண்ணீரை சிலர், அமைச்சரின் பெயரை பயன்படுத்தி கோரையாற்றிற்கு கொண்டு செல்கின்றனர். இதனால் நீடாமங்கலத்தை கடந்து கடை மடைக்கு தண்ணீர் வருவதில்லை. கடைமடை பாசனம் கேள்விக்குறியாவிட்டது. தற் போது நேரடி நெல் விதைப்பு செய்த வயல்கள், நாற்றங் கால் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகி வருகிறது. இதேநிலை ஒரு வாரம் நீடித்தால், நேரடி விதைப்பு செய்த வயல்களில் மீண்டும் விதை தெளிக்க நேரிடும். இதற்கு மீண்டும் விதை நெல்லை மானிய விலையில் அரசு வழங்க வேண்டும். உடனே கடைமடை பகுதி க்கு கூடுதலாக தண்ணீர் திறந்து இளம் நெற்பயிர் களை காப்பாற்ற வேண்டும்' என்றார். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கிரிதரன் கூறுகையில், 'கடை மடை பகுதியில் நேரடி நெல் விதைப்பு செய்த வயல்களில் 10 நாட்களாக தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகி வருகிறது. கருகும் பயிரை காப்பாற்ற வெண்ணாற்றில் தொடர்ந்து 10 நாட்களுக்கு 9,000 கனஅடி தண்ணீர் திறந்துவிட வேண்டும். அப்போது தான் கருகும் நெற்பயிரை காப்பாற்றலாம். மேலும் ஆரம்ப கட்டத்திலேயே களைக்கொல்லி, ஆட்கள் மூலம் களைகளை கட்டுப்படுத்தினால் தான் செலவு குறைவாகும். இந்த பணியை செய்ய தண்ணீர்தான் அவசியம் வேண்டும்' என்றார்.

## கும்கி மண்ணியாற்றில் 1,600 ஏக்கர் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எம்எல்வுக்கு விவசாயிகள் பாராட்டு

மயிலாடுதுறை, : மயிலாடுதுறை அடுத்த கேசிங்கன், முடிகண்டநல்லூர், தலைஞாயிறு, கிழாய், இளந்தோப்பு, நமச்சிவாயபுரம், வரதம்பட்டு, ஆத்தூர், பூதங்குடி, கடலங்குடி, திருச்சிற்றம்பலம், மேலாநல்லூர் போன்ற 15 ஊராட்சிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் 1,600 ஏக்கர் விவசாயம் செய்யப்படுகிறது.

மண்ணியாறு மூலம் பாசனம் நடைபெற்று வருகிறது. மண்ணியாறு தஞ்சை மாவட்டம் திருவையாறில் பிரிகிறது. அங்கிருந்து வரும் தண்ணீர் கேசிங்கன் பகுதியில் சரியாக பாய்வதில்லை. இதனால் கடலூர் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள அணைக்கரையில் இருந்து கும்கி மண்ணியாறு என்ற ஆறு புதிதாக வெட்டப்பட்டது. அணைக் கரையில் இருந்து கும்கி மண்ணியாற்றில் திறக்கப்படும் தண்ணீர் கேசிங்கன் என்ற இடத்தில் செல்லும் மண்ணியாறில் கலக்கிறது. இதனால் இந்த ஊர்களில் உள்ள வயல்களுக்கு மண்ணியாறு பாசனத்தை கொடுக்கிறது.

இந்நிலையில் செப்டம்பர் 17ம் தேதி பாசனத்திற்காக மேட்டூரில் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் இதுவரை மண்ணியாற்றில் தண்ணீர் வரவில்லை. அணைக்கரையில் இருந்து கும்கி மண்ணியாற்றில் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதுகுறித்து நாகை கலெக்டருக்கு மயிலாடுதுறை எம்எல்ஏ பாலஅருட்செல்வன் புகார் கொடுத்தார். ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை.

இதுகுறித்து மயிலாடுதுறை பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பக்தவச்சலத்திடம் கேட்டதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஆனால் இதில் தண்ணீர் திறப்பதற்கு அணைக்கரையில் உள்ள கடலூர் மாவட்ட பொதுப்பணித்துறையினர்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனால் விரக்தியடைந்த கேசிங்கன் பகுதி விவசாயிகளுடன் நேற்றுமுன்தினம் எம்எல்ஏ பாலஅருட்செல்வன் அணைக்கரை பகுதிக்கு சென்று பார்வையிட்டார். இதையடுத்து கும்கி மண்ணியாற்றில் 150 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணைக்க ரை பொதுப்பணித்துறை அதிகாரிகள், தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படும் என்று எம்எல்ஏவிடம் தெரிவித்தனர்.இதுகுறித்து கேசிங்கன் பகுதி விவசாயி ரவீந்திரன் கூறுகையில், ‘இப்பகுதியை சேர்ந்த 1,600 ஏக்கரிலும் குறுவை சாகுபடி இல்லாமல் ஆகிவிட்டது. தற்போது சம்பா பயிருக் காக அவ்வப்போது கிடை த்த மின்சாரத்தை வைத்து நாற்றங்கால் தயார்செய்து நாற்றுவிட்டு பறிக்கும் சூழல் உள்ளது. இந்த நேரத்தில் தண்ணீர் வராத தால் மிகுந்த வேதனையில் ஆழ்ந்திருந்தோம். தற்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தண்ணீர் வழங்கினால்தான் நிலத்தடி நீரும் உயரும். போர்வெல்லும் தடங்கல் இல்லாமல் இயங்கும். கும்கி மண்ணியாற்றில் தொடர்ந்து தண்ணீர் வழங்கவேண்டும். நடவடிக்கை எடுத்த எம்எல்ஏவுக்கு நன்றி என்றார்.

**மாவட்டத்தில் கன மழை சூறாவளியால் வாழை மரங்கள் சாய்ந்தன**

ஈரோடு, : ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். மாவட்டத்திலேயே அதிகளவாக சிவகிரி, கொடுமுடியில் மழைப்பதிவானது. தென்மேற்கு பருவமழை மறைவு மாவட்டமாக ஈரோடு திகழ்வதால் கோவை, நீலகிரி மாவட்டங்களை காட்டிலும் ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்து போனது. இதன் காரணமாக மே மாதத்திலிருந்து செப்டம்பர் மாத இறுதி வரையிலான தென்மேற்கு பருவமழை சீசனில் சொற்ப அளவிலேயே மழை பெய்தது.

வழக்கமாக வடகிழக்கு பருவமழையே ஈரோடு மாவட்டத்திற்கு கை கொடுக்கும். அதன்படி நடப்பாண்டு அக்டோபரில் இருந்து டிசம்பர் வரையிலான வடகிழக்கு பருவமழை சீசனில் மழைப்பொழிவை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர். ஆனால் இம்மாதம் துவங்கியதில் இருந்து கடந்த 8ம் தேதி வரையிலும் அக்னி வெயிலுக்கு இணையான தாக்கம் இருந்தது. இந்நிலையில் கடந்த 9 மற்றும் 10ம் தேதி ஆகிய இரு தினங்களும் ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

கடந்த 9ம் தேதி அதிகபட்சமாக ஈரோட்டில் 124.5 மி.மீ., மீட்டர் மழைப்பதிவானது. இது இந்த ஆண்டிலேயே ஈரோட்டில் பெய்த அதிகபட்ச மழைப்பதிவாகும். இதேபோல நேற்று முன்தினம் இரவும் ஈரோட்டில் மழை பெய்தது. மழையால் பிரப் ரோடு, மேட்டூர் ரோடு பகுதிகளில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பெரியளவில் மழைசேதம் இல்லை.

அதேசமயம் சிவகிரி, கொடுமுடி பகுதிகளில் கனமழை பெய்ததால் சில இடங்களில் வாழை மரங்கள் சூறாவளி காற்றில் சாய்ந்தன. பெருந்துறை பழைய பஸ் ஸ்டாண்ட் பகுதியில் உள்ள மார்க்கெட்டில் மழைநீர் புகுந்ததால் வியாபாரிகள் அவதியடைந்தனர். மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதேபோன்று தொடர்ந்து மழைப்பெய்தால் தான் ஓரளவு நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்றும், வறண்டு கிடக்கும் ஏரி, குளம் குட்டைகளில் போதிய நீர் சேகரிக்கப்பட்டு வறட்சியை தாக்குப்பிடிக்க முடியும் என விவசாயிகள் நம்புகின்றனர்.

மாவட்டத்தில் அதிகபட்சமாக சிவகிரியில் 47 மி.மீ., கொடுமுடியில் 26.4 மி.மீ., மழைப்பதிவானது.

நேற்று காலை 8 மணி வரை மாவட்டம் முழுவதும் பதிவான மழையளவு விபரம் வருமாறு: ஈரோடு- 7.2 மி.மீ., பவானிசாகர்- 2.6 மி.மீ., புங்கம்பாடி- 15 மி.மீ., அறச்சலூர்- 8 மி.மீ., சிவகிரி- 47 மி.மீ., சென்னிமலை- 12 மி.மீ., காங்கயம் -46.6 மி.மீ., மங்கலப்பட்டி- 26 மி.மீ., கோபி- 10

மி.மீ., முத்தூர்- 33 மி.மீ., கவுந்தப்பாடி- 4.2 மி.மீ., எலந்தகுட்டைமேடு- 8 மி.மீ., பெருந்துறை- 13 மி.மீ., பவானி- 2 மி.மீ., கொடுமுடி- 26.4 மி.மீ., ஒரத்துப்பாளையம்- 14 மி.மீ.,

**மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி 70 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி பாதிப்பு**

ஈரோடு, : தமிழகம் முழுவதும் கடும் வறட்சி நிலவி வருவதால் நடப்பாண்டில் நெல் சாகுபடி கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. குறிப்பாக கர்நாடகாவில் இருந்து காவிரி நீர்வரத்து இல்லாததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முற்றிலுமாக பாதிக்கப்பட்டு விட்டது. தற்போது சம்பா சாகுபடிக்காக தாமதமாகவே டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டுள்ளதால் நெல் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளது.

தமிழக அளவில் காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக நெல் சாகுபடி அதிக பரப்பளவில் நடைபெறுவது ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசனப்பகுதியாகும். பவானிசாகர் அணையில் இருந்து ஏறத்தாழ கீழ்பவானி பாசனப்பகுதியில் மட்டும் ஆகஸ்ட் 15ம் தேதி முதல் டிசம்பர் இறுதி வரையிலும் திறக்கப்படும் தண்ணீரை கொண்டு சுமார் 70 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படும். இதுதவிர பவானிசாகர் அணை மூலம் பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரை கொண்டு தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனம் மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனப்பகுதிகளில் சுமார் 25 முதல் 30 ஆயிரம் ஏக்கர் என மொத்தம் மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால் கீழ்பவானி பாசனப்பகுதியில் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி முற்றிலும் தடைபட்டு போனது. மீதமுள்ள 25 முதல் 30 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே இந்த ஆண்டு நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. இதனால் இந்த ஆண்டு மாவட்டத்தின் நெல் சாகுபடி பரப்பு 70 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு சாகுபடி செய்துள்ள நெல்லுக்கு கட்டுபடியாகும் வகையில் நெல்லுக்கான ஆதார விலையை அரசு அதிகரித்து அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. தற்போது மோட்டா ரக நெல் குவின்டாலுக்கு ரூ.1300க்கும், சன்ன ரகம் ரூ.1350க்கும் விற்கப்படுகிறது. ஒரு குவின்டால் நெல்லுக்கு ரூ.2200 வீதம் ஆதாரவிலை அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கூறியதாவது:

ஏற்கனவே இந்த ஆண்டு கீழ்பவானி பாசன பகுதியில் நெல் சாகுபடி அறவே இல்லாமல் உள்ளது. எனவே குறைந்த பரப்பிலேயே மாவட்டம் முழுவதும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒரு குவின்டால் மோட்டா ரக நெல் ரூ. 1300க்கும், சன்ன ரக நெல் ரூ.1350 வீதம் அரசு கொள்முதல் விலை நிர்ணயம் செய்து அறிவித்துள்ளது. தற்போதைய நிலையில் உரமிடுதல் உள்ளிட்ட மற்று இதர செலவுகளின் விலையேற்றத்தை கணக்கிடும் போது இந்த விலை நிர்ணயம் கட்டுபடியானதாக இல்லை. தமிழக அரசு தமிழகம் முழுவதும் 49 இடங்களில் வேளாண் அரசுப் பண்ணைகளை நடத்தி வருகிறது.

இந்த வேளாண் பண்ணைகளில் நெல் சாகுபடி செய்து உழவு முதல் அறுவடை வரையிலும் ஆகும் செலவினங்களை கணக்கிட்டு, எம்.எஸ்.சுவாமிநாதன் பரிந்துரைப்படி 50 சதவீதம் இலாபத்தையும் சேர்த்து, நெல் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்தாலே நெல்லுக்கு அரசு வழங்கியுள்ள கொள்முதல் விலை நியாயமானது அல்ல என்பது தெரிய வரும்.

எனவே ஒரு குவின்டால் நெல் ரூ.2,200 வீதம் விலை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டும். இவ்வாறு நல்லசாமி தெரிவித்தார்.

## தமிழக அரசுக்கு விவசாயிகள் கேள்வி கரும்பு கொள்முதல் விலை அறிவிக்காமல் காலம் தாழ்த்துவது ஏன்?

ஈரோடு, : நடப்பு ஆண்டுக்கான கரும்பு கொள்முதல் விலையை அரசு அறிவிக்காமல் காலம் தாழ்த்துவது ஏன் என்று தமிழக அரசுக்கு விவசாயிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

மத்திய அரசு நடப்பு ஆண்டுக்கான கரும்பு கொள்முதல் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.1650 அறிவித்தது. ஆனால் மாநில அரசு கொள்முதல் விலையை அறிவிக்காமல் இருப்பதால் விவசாயிகள் கரும்பை வெட்டுவதா அல்லது கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட விலைக்கே விற்பனை செய்வதா என்பது தெரியாமல் தவித்து வருகின்றனர்.வழக்கமாக அக்டோபர் மாதம் சர்க்கரை ஆலைகளில் அரவை தொடங்கப்பட்டு ஆகஸ்ட் இறுதி வரை நடைபெறும். அரவை தொடங்குவதற்கு முன்பாக கொள்முதல் விலையை மாநில அரசு அறிவிப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

ஆனால் இந்த ஆண்டு அரவை தொடங்கப்பட்டு 10 நாட்களாகியும் இன்னும் விலை அறிவிக்காதது விவசாயிகளை அதிருப்தியடைய செய்துள்ளது.

இது குறித்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன சபை தலைவர் தளபதி கூறியதாவது: தேசிய வேளாண் உற்பத்தி மற்றும் விலை நிர்ணய குழு சார்பில் ஆண்டு தோறும் ஒவ்வொரு வேளாண் விளைபொருளுக்கான விலை அரசுக்கு பரிந்துரை செய்யப்படுவது வழக்கமாகும். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு கரும்புக்காக விலையை இக்குழு பரிந்துரை செய்தது. ஆனால் என்ன விலை பரிந்துரை செய்திருந்தது என்பதை மத்திய அரசு தான் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

மத்திய அரசு 3 மாதங்களாக மவுனம் காத்து வருகிறது. மத்திய அரசு அறிவிக்கும் விலையில் இருந்து குறிப்பிட்ட தொகையை உயர்த்தி மாநில அரசு கொள்முதல் விலை அறிவிக்கும். ஆனால் இந்த ஆண்டு மாநில அரசும் தொடர்ந்து மவுனம் காத்து வருகின்றன. வழக்கமாக அரவை தொடங்கப்படும் அக்டோபர் 1ம் தேதிக்கு முன்பாகவே கொள்முதல் விலை அறிவிக்கப்படும். அந்த விலை கட்டுப்படியானதாக இருந்தால் மட்டுமே விவசாயிகள் கரும்பு வெட்ட அனுமதிப்பார்கள். ஆனால் ஆலைகளில் அரவை தொடங்கப்பட்டு 10 நாட்கள் ஆகியும் இன்னும் விலை அறிவிக்காதது ஏன் என்பது தெரியவில்லை.

ஆலை நிர்வாகத்திற்கு என்ன விலைக்கு விற்பனை செய்வது என்பது விவசாயிகளுக்கு தெரியாத நிலை உள்ளது. கரும்பு கொள்முதல் விலையை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என பல முறை விவசாயிகள் போராட்டம் நடத்தியும் அரசு கண்டுகொள்ளாமல் உள்ளது.

அதிமுக அரசின் தேர்தல் அறிக்கையில் டன் ஒன்றுக்கு ரூ.2500 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், குறைந்தபட்ச ஆதரவு விலையை கூட அரசு அறிவிக்காமல் இருப்பது ஏன் என்பது தெரியவில்லை. இவ்வாறு தளபதி கூறினார்.

## தண்ணீர் தட்டுப்பாட்டால் மானாவாரி சாகுபடிக்கு மாறிய டெல்டா விவசாயிகள்

திருமானூர், : புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் வராததாலும், பருவமழை பெய்யாததாலும் திருமானூர் டெல்டா பகுதி விவசாயிகள் மானாவாரி சாகுபடிக்கு மாறி உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் திருமானூர் மற்றும் தா.பழூர் ஒன்றியம் டெல்டா பகுதிகளாகும். இப்பகுதிகளில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் வாரத்திலிருந்தே சம்பா சாகுபடிக்கு நாற்றுவிடும் பணி துவங்கிவிடும். வாய்க்கால் தண்ணீர் வசதியில்லாதவர்கள் மின் மோட்டார், ஆயில் இன்ஜின் கொண்டு நாற்று விடும் பணியில் ஈடுபடுவர். நவம்பர், டிசம்பர் மாதங்களில் பருவ மழை பெய்யும் போது அனைத்து வயல்களுக்கும் போதுமான தண்ணீர் கிடைத்துவிடும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதாலும், மேட்டூர் அணையில் தண்ணீர் குறைவாக உள்ளதாலும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. திருமானூர் பகுதி விவசாயிகள் புள்ளம்பாடி வாய்க்காலை நம்பியே சம்பா சாகுபடி செய்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் புள்ளம்பாடி வாய்க்காலில் செப்டம்பர் மாதமே தண்ணீர் திறந்து விடப்படும். ஆனால் இந்த ஆண்டு மழை இல்லாத காரணத்தால் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. சென்ற மாதம் பெய்த மழையை பயன்படுத்தி டெல்டா பகுதியை சேர்ந்த விவசாயிகள் நெல் பயிரிடுவதை கைவிட்டு மக்காசோளம், சோளம், கம்பு போன்ற மானாவாரி

பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். தற்பொழுது ஒரு மாத பயிர்களும் தண்ணீர் இல்லாமல் வாடி உள்ளன. இந்த பயிர்கள் விளைச்சலுக்கு வர இன்னும் 2 மாதங்களுக்கு மேல் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் திருமானூர் டெல்டா பகுதிகள் வெள்ளக்காடாக மாறிவிடும். அப்பொழுது பள்ளமான வயல் பகுதிகள் முற்றிலுமாக பாதிக்கப்படும். இந்த ஆண்டும்  ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் மழைபெய்து வெள்ளம் வந்துவிடுமோ என்ற அச்சத்திலும் உள்ளனர். அப்படி மழை பெய்தால் மானாவாரி பயிர்களும் வீணாகிவிடும். இதனால் பள்ளமான பகுதிகளில் வயல்களை கொண்ட விவசாயிகள் பல குழப்பங்களில் உள்ளனர்.

இது குறித்து விவசாயி தர்மன் கூறுகையில், எனது வயல் 1 ஏக்கர் பள்ளமான பகுதிகளில் உள்ளது. தற்சமயம் இந்த வயலுக்கு ஆயில் இன்ஜின் கொண்டு நாற்றுவிட்டு உள்ளேன். டீசல் விலையும் தற்பொழுது உயர்ந்து விட்டது. மேலும் மழை பெய்தால் தான் நடவிற்கு வயலை தயார் செய்யமுடியும். பயிர்களும் செழிப்பாக வளரும், மகசூலும் கிடைக்கும். 2 ஏக்கர் நிலம் மேட்டு பகுதியில் உள்ளது. இன்றுவரை அந்த வயலில் என்ன பயிர் செய்வதென்றே புரியாமல் குழம்பி உள்ளேன். மானாவாரி பயிர் செய்தால் மழை அதிகமாக பெய்யும் பொழுது மானாவாரி பயிர் முற்றிலுமாக அழிந்துவிடும்.

சுப்பிரமணியன் கூறுகையில், எனது வயல்கள் முழுவதும் புள்ளம்பாடி வாய்க்காலின் தண்ணீரை நம்பியே உள்ளன. இன்று வரை மழை இல்லை. தண்ணீர் இல்லை.

மானாவாரி பயிர் செய்யலாம் என்றால் ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் அதிகமாக மழை பெய்தால் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட்டுவிடும். அதனால் இன்றுவரை வயலில் பயிர்செய்ய எந்த ஒரு முயற்சியும் எடுக்காமல் இருக்கின்றேன்.

சண்முகம் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் ஆரம்பத்திலேயே நாற்றுகள் விட்டுவிடுவேன். இந்த ஆண்டு மழை இல்லாததால் இன்றுவரை நாற்றுவிடவில்லை. இனியும் மழையில்லை என்றால் கார்த்திகை மாதம் மழைபெய்தால் சோளம் பயிர் செய்யலாம் என உள்ளேன் என்றார்.

முருகையன் கூறுகையில், கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த மழையில் கம்பு பயிரிட்டேன். ஆனால் இதன் பிறகு மழை இல்லை. இதனால் பயிர்கள் வாடிவிட்டது. இனியும் 10 நாட்களுக்கு மழையில்லை என்றால் கம்பு பயிரும் முற்றிலுமாக பாதிக்கப்படும் என்றார்.

DAILY THANTHI
தினத் தந்தி
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

11.10.2012 A.M

**தென் ஆ பிரிக்க நாட்டில் இருந்து**
**சம்பா சாகுபடிக்காக 3,571 டன் உரம் கும்பகோணம் வந்தது**

தென் ஆ பிரிக்க நாட்டி லிருந்து டெல்டா மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்காக 3,571டன் டி.ஏ.பி., யூரியா, பொட் டாஷ் டன் உரம் கும்ப கோணம் ரெயில் நிலையத்திற்கு நேற்று வந்தது.

இரு பு

டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கு தேவை யான அடி ரம், விதை ஆகிய வற்றை விவசாயிகளுக்கு விற் பனை செய்ய வேளா மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளா மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இரு பு வைக்க பட்டுள்ளது. மேலும் டெல்டா மாவட் டத்தில் உள்ள 15 தனியார் உர விற்பனை மொத்த டீலர் களுக்கும், அவர்களிடம் உரங் களை எடுத்து சில்லறை விற் பனை செய் ம் 250 தனியார் கடைகளுக்குமான உரங்களை இறக்குமதி செய்து தர மத்திய அரசு முடிவு செய்து, தென் ஆ பிரிக்க நாட்டிலிருந்து ஆந்திரமாநிலம் கிருஷ்ணாபட் டணம் துறைமுகத்திற்கு உரங் கள் இறக்குமதி செய்ய பட்டது.

3,751 டன் உரம்

இறக்குமதி செய்ய பட்ட 3,571 டன் உரங்கள் 58 ரெயில் வேகன் மூலம் கும்பகோணம் ரெயில் நிலையத்திற்கு நேற்று வந்தது. கும்பகோணம் ரெயில் நிலையத்திற்கு வந்த உரங்களை தனியார் உர விற்பனை டீலர் வழியாக 150 லாரிகளில் உர மூட்டைகள் ஏற்ற பட்டு, தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள 250 தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனு பி வைக்க பட்டன.

**பூத பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில்**
**ரூ.10 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை**

பூத பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், ரூ.10 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

தேங்காய்

அம்மாபேட்டை அருகே உள்ள பூத பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. 10 ஆயிரத்து 940 தேங்காய்கள் ஏலத்துக்கு கொ டுவர பட்டு இருந்தது. இதில் பெரிய தேங்காய் 5 ரூபாய்க்கும், சிறிய தேங்காய் 2 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 32 ஆயிரத்து 793 ரூபாய்க்கு தேங்காய்கள் விற்பனையானது.

கொ பரை தேங்காய் 259 மூட்டைகள் கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்தபட்ச

விலையாக 3 ஆயிரம் ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 2 லட்சத்து 65 ஆயிரத்து 391 ரூபாய்க்கு கொ பரை தேங்காய் விற்பனையானது.

நிலக்கடலை

நிலக்கடலை 440 மூட்டைகள் விற்பனைக்கு கொ டுவர பட்டு இருந்தது. பச்சை நிலக்கடலை குவி டால் குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 100 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரம் ரூபாய்க்கும், காய்ந்த நிலக்கடலை குவி டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 700 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 400 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 5 லட்சத்து 57 ஆயிரத்து 308 ரூபாய்க்கு நிலக்கடலை விற்பனையானது.

மக்காச்சோளம்

மக்காச்சோளம் 110 மூட்டைகள் விற்பனைக்கு கொ டுவர பட்டு இருந்தது. குவி டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,117–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,324–க்கும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 240 ரூபாய்க்கு மக்காச்சோளம் விற்பனையானது.

பொன்னி ரக நெல் 17 மூட்டைகள் கொ டு வர பட்டு இருந்தது. குவி டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,692–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,800–க்கும் ஏலம் போனது.

மொத்தம் 19 ஆயிரத்து 971 ரூபாய்க்கு நெல் விற்பனையானது.

நேற்று பூத பாடியில் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 10 லட்சத்து 703 ரூபாய்க்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

**பெருந்துறை வேளா மை கூட்டுறவு சங்கத்தில்**
**ரூ.18 லட்சத்துக்கு கொ பரை தேங்காய் ஏலம்**

பெருந்துறை வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொ பரை தேங்காய் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் போனது.

கொ பரை தேங்காய்

பெருந்துறை வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொ பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 980 மூட்டைகள் கொ பரை தேங்காய் விற்பனைக்கு கொ டுவர பட்டு இருந்தன. இது 50 ஆயிரம் கிலோ ஆகும்.

இதில் முதல்தரமான கொ பரை தேங்காய் கிலோவுக்கு 36 ரூபாய் 10 காசு முதல் 37 ரூபாய் 80 காசு வரை ம், இர டாம் தரம் கிலோவுக்கு 30 ரூபாய் 10 காசு முதல் 35 ரூபாய் 40 காசு வரை ம் ஏலம் போனது. கடந்த வாரம் சனிக்கிழமை நடந்த ஏலத்தைவிட இந்த வாரம் நடந்த ஏலத்தில் கொ பரை தேங்காய் கிலோவுக்கு ஒரு ரூபாய் கூடுதல் விலை கிடைத்தது.

நேற்று நடந்த ஏலத்தில் கொ பரை தேங்காய் மொத்தம் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் விட பட்டது.

**ர் பிடி பு பகுதிகளில் பலத்த மழை**
**பவானிசாகர் அணை ர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது**
**விவசாயிகள் மகிழ்ச்சி**

ர் பிடி பு பகுதிகளில் பலத்த மழை பெய்ததால், பவானிசாகர் அணை ர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது.

பவானிசாகர் அணை

பவானிசாகர் அணை 120 அடி உயரம் கொ டதாகும். சேறும் சகதி ம் 15 அடி போக அணையில் 105 அடிக்கு அணையில் த ணீரை தேக்கி வைக்க முடி ம். 32 டி.எம்.சி. கொள்ளளவு கொ ட இந்த அணையில் இருந்து கீழ் பவானி வாய்க்கால் மூலம் ஒரு லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங் கள் பாசன வசதி பெறுகின்றன.

இதேபோல் பவானி ஆற்றின் வழியாக தட பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் மூலம் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேலும் பவானி, சத்தி, கோபி, புஞ்சை புளியம்பட்டி நகராட்சி மற்றும் 50–க்கும் மேற்பட்ட பேரூராட்சி, 100–க்கும் மேற்பட்ட ஊராட்சி பகுதியை சேர்ந்தவர்கள் குடி ர் தேவைக்கு பவானிசாகர் அணையையே நம்பி உள்ளனர்.

ர்மட்டம் குறைந்தது

கடந்த ஆ டு பவானிசாகர் அணையின் ர் பிடி பு பகுதிகளான லகிரி, கூடலூர் மலை பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் அணைக்கு வரும் ர்வரத்து குறைந்தது.

இதுதவிர கடந்த மாதம் கீழ்பவானி வாய்க்கால் மூலம் பாசன நிலங்களுக்கு உயிர் ராக வினாடிக்கு 2,300 கன அடி த ணீர் திறந்து விட பட்டது. இதனால் அணையின் ர்மட்டம் மேலும் குறைந்தது. நேற்று முன்தினம் அணையின் ர்மட்டம் 26 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 300 கனஅடி த ணீர் வந்துகொ டு இருந்தது.

பலத்த மழை

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதனால் அணையில் இருந்து உயிர் ர் திறந்து விட படுவது நிறுத்த பட்டது.

இதேபோல் அணையின் ர் பிடி பு பகுதிகளான கூடலூர், லகிரி பகுதி களில் பலத்த மழை பெய்து வருகிறது. மேலும் பில்லூர் அணையில் இருந்து பவானிசாகர் அணைக்கு த ணீர் திறந்து விட பட்டு உள்ளது. இதனால் அணைக்கு ர்வரத்து அதிகரித்து உள்ளது.

6 அடி உயர்ந்தது

நேற்று முன்தினம் 26 அடியாக இருந்த அணை ர்மட்டம், நேற்று மதியம் 32.41 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் ர்மட்டம் 6 அடி உயர்ந்து உள்ளது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலுக்கு 5 கனஅடி த ணீரே திறந்து விட படுகிறது.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய ர் ஆதாரமான பவானிசாகர் அணை ர்மட்டம் உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை**

நெல்லை மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது.

பருவ மழை

வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி இருந்த நிலையில் கடந்த 2 நாட்களாக ஆங்காங்கே லேசான சாரல் மழை பெய்து இருந்தது. இந்த நிலையில் நெல்லை அருகே உள்ள பகுதிகளில் நேற்று இடி, மி ன்னலுடன் பலத்த மழை பெய்தது.

முன்னதாக பகல் 2 மணி அளவில் வானம் மேகமூட்டத்துடன் காண பட்டது. மாலை 3.30 மணிக்கு பின்னர் மின்னல், இடி முழக்கம் ஏற்பட்டு மழை பெய்யத் தொடங்கியது.

நெல்லை சந்தி பு, பாளையங்கோட்டை, டவுன், பேட்டை, பழைய பேட்டை, அபிஷேக பட்டி, சுத்தமல்லி, கல்லூர் பகுதிகளில் பலத்த மழை சுமார் அரை மணி நேரம் பெய்தது. இதனால் சாலைகளில் மழை வெள்ளம் ஆறாக ஓடியது.

சேரன்மாதேவி

பாவூர்சத்திரம் பகுதியில் நேற்று பிற்பகல் 2.30 மணி அளவில் லேசான மழை பெய்தது. ஆழ்வார்குறிச்சி, பொட்டல்புதூர் பகுதியில் மாலை 3.30 மணிக்கு பலத்த மழை பெய்தது. கடையம் பகுதியில் லேசான மழை பெய்தது. காவல்கிணறு, வள்ளியூர் ஆவரைகுளம் பகுதியில் நேற்று மாலையில் சாரல் மழை பெய்தது.

சேரன்மாதேவி பகுதியில் 3.30 மணியில் இருந்து பலத்த மழை பெய்தது. தென்காசி பகுதியில் 12 மணிக்கு சாரல் மழை பெய்தது.

சங்கரன்கோவில்

சங்கரன்கோவில் பகுதிகளில் மாலை 5.15 மணி முதல் 6 மணி வரை பலத்த மழை பெய்தது. சிவகிரி பகுதிகளில் மாலை 6.10 மணி முதல் 7 மணி வரை இடி மின்னலுடன் மழை பெய்தது.

**காவிரி  ர் பிடி  பு பகுதியில் பலத்த மழை பெய்ததால்**
**மேட்டூர் அணைக்கு  ர் வரத்து அதிகரி பு**

காவிரி  ர் பிடி பு பகுதியில் நேற்று முன் தினம் பலத்த மழை பெய்ததால் மேட்டூர் அணைக்கு  ர் வரத்து அதிகரித்து உள்ளது.

பலத்த மழை

கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகத்துக்கு இந்த மாதம் 15–ந்தேதி வரை வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் த  ணீரை திறந்து விட சு ரீம் கோர்ட்டு உத்தரவு பிற பித்தது. ஆனால் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு திறந்து விட பட்ட த  ணீர் இடையிலேயே நிறுத்த பட்டது.

இதையடுத்து தமிழக அரசு கர்நாடக அரசு மீது  திமன்ற அவமதி பு வழக்கை தொடர்ந்து உள்ளது. கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு த  ணீர் திறந்து விட படுவது நிறுத்த பட்டதால் மேட்டூர் அணைக்கு  ர் வரத்து குறைந்து கொ  டேவருகிறது. இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு காவிரி பிடி பு பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக அணைக்கு  ர்வரத்து 15,449 கன அடியாக அதிகரித்து உள்ளது.

18,600 கன அடிவீதம்

மேலும் மழையின் காரணமாக குடி  ர் தேவைக்காக கால்வாயில் வினாடிக்கு 700 கன அடி வீதம் திறந்து விட பட்ட த  ணீர் நேற்று (10–ந் தேதி) முதல் வினாடிக்கு 550 கன அடியாக குறக்க பட்டுள்ளது.

மேட்டூர் அணையின்  ர்மட்டம் நேற்று 71.02 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 15,449 கன அடி வீதம் த  ணீர் வந்து கொ  டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 18,600 கன அடி வீதம் த  ணீர் திறந்து விட படுகிறது.